## நோக்கு

நாட்டில் முதன்மை வாய்ந்த
அந்நிய செலாவணி ஈட்டும்
தாபனங்களில் ஒன்றாக விளங்குதல்



## பணி

தாபனம் பெற்றுக்கொள்ளக்கூடிய
அனைத்து பாரமான கனிப்பொருள்
கொண்ட கடற்கரை மணல்
வகைகளினதும் வேறு இயற்கை
வளங்களினதும் பெறுமதியை
உச்சப்படுத்துதல்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| தாபனத் தகவல்கள் | 01 - 02 |
| தலைவரின் செய்தி | 03 |
| பணிப்பாளர் அறிக்கை | 04 - 09 |
| முக்கிய நிதிசார் தகவல்கள | 10 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை | 11 |
| சுயேச்சைக் கணக்காய்வாளரின் அறிக்கை | 12 - 15 |
| நிதிக் கூற்றுக்கள - | 16 - 42 |

# தாபனத் தகவல்கள்

| | | |
|---|---|---|
| பெயர் | : | இலங்கை கனிப்பொருள் மணல் விமிடட் |
| சட்ட அமைப்பு | : | இலங்கை அரசாங்கத்திற்கு முற்றிலும் சொந்தமான வரையறுக்கப்பட்ட நிறுவனமாகும். |
| நிறுவன பதிவு இல | : | PB 587 |
| பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் | : | இல. 341/21, சரண மாவத்தை, இராஜகிரிய |

**பணிப்பாளர்கள் :**

| | |
|---|---|
| திருமதி. ஐ. ரணதுங்க | - பதில் தலைவர் |
| திரு. ஆர். ஹபீப் | - நிர்வாகப் பணிப்பாளர் |
| திரு. எஸ்.எல்.ஏ. ரஸ்ஸாக் | - நிறைவேற்றுப் பணிப்பாளர் |
| திருமதி. கே.எல். ரம்யகாந்தி | - பணிப்பாளர்/ திறைசேரிப் பிரதிநிதி |

**முகாமைத்துவக் குழு :**

| | |
|---|---|
| திரு. ஏ.டீ.பீ.ஐ. பிரசன்ன<br>SLAS, B.Sc (Agri) Sp.,<br>M.Sc (Mgt.) | - பொது முகாமையாளர் |
| திரு. எஸ். ஞானேஸ்வரன்<br>B.Sc. Eng.,<br>உறுப்பினர்-பொறியியலாளர் நிறுவகம் | - பிரதிப் பொது முகாமையாளர் (பொறி/செயற்பாடுகள்) |
| திரு. எல்.எஸ். அபேரத்ன<br>கணக்கியல் மற்றும்<br>நிதி –விசேட | - பதில் பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளம் மற்றும் நிர்வாகம்) |
| திருமதி டப்ளியூ.கே. தமாரா<br>L.I.C.A., APFA | - பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) |
| திரு. எம்.ஏ.ஐ.ஜீ. ஜயதிலக்க<br>L.I.C.A. | - பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் |
| திரு. டப்ளியூ.டப்ளியூ.டீ. டப்ளியூ. குமார<br>B.Sc. | - வழங்கல் முகாமையாளர் |
| திரு. பி.பீ.எம். விஜேபண்டார<br>B.Sc | - சந்தைப்படுத்தல் முகாமையாளர் |

## தாபனத் தகவல்கள்

**கணக்காய்வாளர்கள்** : கணக்காய்வாளர் தலைமை அதிபதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
பொல்தூவ வீதி,
பத்திரமுல்லை

**வங்கியாளர்கள்** : இலங்கை வங்கி
மக்கள் வங்கி
ஹற்றன் நஷனல் வங்கி
செலான் வங்கி

**செயலாளர்கள்** : (01.01.2017 முதல் 03.10.2017 வரை)

பீ.டப்ளியூ. கோப்பரேட் செக்ரடேரியல் (தனியார்) லிமிடட்,
3/17, கின்சி வீதி,
கொழும்பு- 08

(04.10.2017 முதல் 31.12.2017 வரை)

பதில் கம்பனி செயலார்
சட்ட அதிகாரி/வாரியம் செயலாளர்
திருமதி. கமயந்தி குரே
இலங்கை கனிப்பொருள் மணல் விமிடட்

# தலைவரின் செய்தி

2017ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை முன்வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அகழ்தல் மற்றும் பாரமான கடற்கரைக் கனிய மணல் பதப்படுத்தல் ஆகியவற்றிற்கான சிலோன் கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனமாக 1957ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு, 1992இல் இலங்கை அரசாங்கத்திற்கு முற்றிலும் சொந்தமாக்கப்பட்ட ஒரு நிறுவனமாக "இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட்" என்ற பெயரின் கீழ் கூட்டுத்தாபனம் லிமிடட்டாக மாற்றம் பெற்றது.

இலங்கை கனிப்பொருள் லிமிடட் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கண்காணிப்பின் கீழ் இயங்குகின்றது.

இவ்வாண்டின் போது உற்பத்தியானது அதிகரித்துள்ளது. இவ்வருடத்தில் 47,728 மெ.தொ. கனிய மணலிலிருந்து 1,424 மில். ரூபா பெறுமதிக்கு விற்பனை மேற்கொள்ளப்பட்டது. வரிக்குப் பின்னரான இலாபம் 474 மி. ரூபாவாகும். அவ்வாறே, கம்பனியால் 161 மி. ரூபா பங்கிலாபத்தினைத் திறைசேரிக்கு வழங்க முடிந்தது. 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் விற்பனை செய்யப்பட்ட தொன் அளவு வீழ்ச்சியடைந்த போதும், உயர் விலைகளின் காரணமாக இலாபத்தின் பெறுமதி அதிகரித்து இருந்தது.

வருட இறுதியின் போது ஆளணியினர் எண்ணிக்கை 695ஆக இருந்தது. ஊழியர்கள் இக்கைத்தொழில் சம்பந்தமாக பெறுமதிமிக்க அறிவினைப் பெற்றுக் கொள்வதற்காக மூன்று வேலைத்தளங்களில் பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் என்பன மேற்கொள்வதன் ஊடாகப் பணிக்குழாத்தினரைப் பயிற்றுவிப்பதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

புதிய தரமுயர்த்தப்பட்ட பொறித் தொகுதியொன்றை நிறுவுவதற்கான கோக்கிளாய் காணிக்கான அகழ்தல் அனுமதிப்பத்திரத்தைப் பெறும் பாரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. தள ஆய்வு மற்றும் புதிய இயந்திரங்களைக் கையகப்படுத்துதல் ஆகியவற்றுடன் உற்பத்தியை அதிகரித்து வருவாயினை அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

பெறுமதி கூட்டல் எமது முக்கிய நோக்கமாவதுடன், தொடரும் ஆண்டின் போது திட்டமிட்ட இலக்குகளை அடைவதில் நம்பிக்கைக் கொண்டுள்ளோம். எவ்வாறெனினும், நாட்டிற்கான தேறிய பெறுமதி மற்றும் சூழல் பாதுகாப்பு போன்ற ஏனைய காரணிகள் என்பன கவனமாக சமநிலைப்படுத்தப்படல் வேண்டும்.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சின் கௌரவ அமைச்சர் அவர்கள், செயலாளர் அவர்கள், பணிக்குழாத்தினர் ஆகியோரினதும் பொதுத் திறைசேரியினதும் தொடர்ச்சியான ஆதரவிற்கு நன்றி கூறுகின்றேன்.

தமது ஊக்கமிகு வழிகாட்டல் மற்றும் ஆதரவை நல்கும் பணிப்பாளர் குழுவினருக்கும் தமது இடையறா முயற்சியினையும் அர்ப்பணிப்பினையும் வழங்கும் எல்லா மட்டத்திலும் உள்ள ஊழியர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்திக்கா ரணதுங்க

தலைவர்- பதில்

.

# 2017ஆம் ஆண்டில மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

- 12 அலகுகளைக் கொண்ட பணிக்குழாத்தினர் மும்மாடி விடுதிகளை நிர்மாணித்தல்
- யான் ஓயா நீரேந்தித் தளத்தில் இருந்து I.R.Z. பொறித்தொகுதிக்கு மூலநீர் பரிமாற்றத்திற்கான P.E. குழாய்களை அமைத்தல்
- உலர் ஆலை ஊழியர்களுக்கான ஓய்வறைகள் மற்றும் மலசலகூடத் தொகுதியினைக் கட்டுதல்.
- புத்தம்புது இரண்டு சக்கர ஏற்றிகளைப் பொறித்தொகுதியின் சுமுகமான செயற்பாட்டிற்காகக் கொள்வனவு செய்தல். சக்கர ஏற்றி இயக்குனர்களுக்கு கல்குலம CETRACயில் பயிற்சி வழங்கப்பட்டது.
- பொறித்தொகுதியின் பாவனைக்காக புத்தம்புது இரண்டு பெக்கோ ஏற்றிகளையும் ஒரு ஸ்கிட் ஸ்டியர் ஏற்றியையும் கொள்வனவு செய்தல்.
- பொறித்தொகுதியின் பாவனைக்காக ஐந்து புத்தம்புது நாற்சக்கர டிராக்டர்களைக் கொள்வனவு செய்தல்.
- ஐந்து டிராக்டர் டிரெய்லர்களை இயந்திரவியல் பட்டறையில் அமைத்தல்.
- பொறித்தொகுதி ஊழியர்களால் கழிவுகளை தரமுயர்த்துவதற்கு ஈர ஆலையில் கழிவுகளைத் தரமுயர்த்தும் பொறித் தொகுதியினை நிறுவுதால்.
- “A” பகுதி பொறித்தொகுதி ஊழியர்களால் கழிவுகளை தரமுயர்த்துவதற்கு ஈர இழுவிசை தரமுயர்த்தல் பொறித்தொகுதியில் கழிவுகளைத் தரமுயர்த்தும் பொறித் தொகுதியினை நிறுவுதல்
- ரூட்டைல் சர்கிட்டிற்கான ஊட்டப்பொருளின் மின்காந்த உள்ளடக்கத்தினைக் குறைப்பதற்கு ஈர ஆலை பொறித்தொகுதி ஊழியர்களால் உலர் மின்காந்த பிரிப்பானை நிறுவுதல்.
- மின்வலுத் தளத்தில் புதிய பிரதான L.V. விநியோகித்தல் பிரிவினை நிறுவுதல். அப்பிரிவினை நிறுவியதன் பின்னர், மின்சாரத் தடை ஏற்படும் போது 40 செக்கன்களில் மின்பிறப்பாக்கிகள் தானியங்குவதோடு மின்சார விநியோகித்தை மீட்டெடுக்கின்றன.
- இல்மனைட்டின் தரத்தினைக் கூட்டுவதற்கு ஈர உயர் செறிவுமிக்க மின்காந்த பிரிப்பான் பொறித்ததொகுதியில் புதிய கட்டுப்பாட்டுப் பகுதிகளை நிறுவுதல்.
- மின்ஆற்றல்மானியுடன் வீடமைப்புத் திட்டத்திற்கு மின்சாரத்தினை வழங்குவதற்கு மேல்நிலை கேபிள்களுடன் கூடிய புதிய மின்மாற்றிகளை அமைத்தல். இதன் காரணமாக வீடமைப்புத் திட்டத்திற்கான விலைப்பட்டியல் வர்த்தக வழங்கலிலிருந்து வீட்டு வழங்கலுக்கு மாறியதுடன், மின்சாரக் கட்டணத்தில் கணிசமான அளவு சேமிப்பு ஏற்படுவதற்கும் ஏதுவாகியது.
- ஊழியர்களுக்கு மகிழ்ச்சிகரமாகப் பணிபுரியும் சூழலை வழங்குவதைற்கு மின்சாரப் பட்டறைகளை மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்து நவீனமயப்படுத்துதல்.
- ஆய்வுகூடத்திற்கு மின்காந்த ரோலர் பிரிப்பானைக் கொள்வனவு செய்தல்.
- பொறித்தொகுதியின் பாவனைக்கு இரு புத்தம்புது கேப் வாகனங்களைக் கொள்வனவு செய்தல்.
- P.E குழாயினால் ஈர இழுவிசை மேம்படுத்தல் பொறித் தொகுதிக்கு கடல் நீர் குழாயிலிருந்து கடல் நீரினை பரிமாற்றுவதற்கு P.V.C. குழாய் வழியினை மாற்றீடு செய்தல.
- இல்மனைட் கிடங்கினைப் புதுப்பித்தல்

# பணிப்பாளர் அறிக்கை

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட்டின் பணிப்பாளர்களால் 2017 திசெம்பர் 31ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான தமது அறிக்கையும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களும் கணக்காய்வு அறிக்கையும் இத்துடன் சமர்ப்பிக்கப்படுகின்றன.

## பிரதான செயற்பாடுகள

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட்டின் கூட்டுத்தாபன சட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்கு அமைய பணிப்பாளர் சபைக்கு பின்வரும் பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.

1. பாரமான கனிப்பொருள் மணல் வகைகளை அகழ்தல், பிரித்தெடுத்தல், சுத்திகரித்தல் பதப்படுத்தல் போன்றன.

2. கரையோர பாரமான கனிப்பொருள் மணலைப் பயன்படுத்தி வர்த்தக அல்லது கைத்தொழில் பெறுமதி மிக்க பொருட்கள் அல்லது அதன் மூலம் உற்பத்தி செய்யத்தக்க ஏதேனும் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல்

3. கரையோர பாரமான கனிப்பொருள் மணலைச் சுத்திகரிக்கும் போது அல்லது பதப்படுத்தலின் போது ஏற்படும் பெறுபேறாக ஏதேனும் உப உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல

## உற்பத்தி

ஆண்டுக்கான உற்பத்தி மெ. தொன்னில் பின்வருமாறு:

| | மெ.தொ. |
|---|---|
| இல்மனைற்று | 47,659 |
| ரூட்டைல் | 2,174 |
| சர்கோன் | 1,061 |
| Hi.Ti. இல்மனைற்று | 4281 |
| சர்கோன் பதப்படுத்தப்படாதது | 365 |
| காந்தமல்லா பாரமான கனிப்பொருள் செறிவு | 35,968 |
| பதப்படுத்தப்படா சர்கோன் சுருள் நுண் மண் செறிவு | 7,508 |
| | 335 |
| பதப்படுத்தப்படா சர்கோன் உயர் தரம் | 6,500 |
| பதப்படுத்தப்படா சர்கோன் குறைந்த தரம் | 10,237 |
| பதப்படுத்தப்படா மொனசைட்டு | 30 |
| வடிகட்டிய பின் மீதமாகும் செறிவு | 700 |
| இரும்புக் கனிமம் | 246 |
| புதிய ஈர நடுவண் கழிவுகள் | 6,572 |
| | 123,636 |

## விற்பனை

கனிப்பொருள் மணல் 47,728.12 மெ.தொ. விற்பனையால் 1,424 மில்லியன் ரூபா ஈட்டப்பட்டது.

| | மெ.தொ. | மி.ரூபா |
|---|---|---|
| இல்மனைற்று | 38,039 | 872 |
| ரூட்டைல் | 1,979 | 225 |
| சர்கோன் | 945 | 129 |
| Hi.Ti.இல்மனைற்று | 3,750 | 84 |
| வடிகட்டிய பின் மீதமாகும் செறிவு | 498 | 7 |
| பதப்படுத்தப்படா சர்கோன் | 1,110 | 40 |
| பதப்படுத்தப்படா சர்கோன் உயர் தரம் | 1,275 | 67 |
| பதப்படுத்தப்படா சர்கோன் குறைந்த தரம் | 132 | 40.2 |
| பதப்படுத்தப்படா மொனசைட் | 0.12 | 0.01 |
| | 47,728.12 | 1,424.21 |

## விளைவுகளும் பங்கிலாபங்களும்

நிறுவனத்தின் வரிக்கு பின்னரான இலாபம் 474 மில்லியன் ரூபாவாகும்.

பொறித் தொகுதியின் 325 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க ஈர்க்கப்படாத மேந்தலைச் செலவுகள் இல்லாதிருந்தால் இலாபம் இன்னும் அதிகமாக இருந்திருக்கும். கட்டுப்படுத்தப்பட்ட உற்பத்தி மற்றும் புல்மோட்டையில் இருந்து நேரடியாகக் கப்பலேற்ற முடியாமை ஆகியவையே ஈர்க்கப்படாத மேந்தலைச் செலவினங்களுக்கு காரணமாகும்.

பங்கிலாபமாக 161 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது.

மில்லியன் ரூபா.

| | 2017 | 2016 |
|---|---|---|
| மொத்த வருமானம் | 1,424 | 1,174 |
| மொத்த இலாபம் | 953 | 607 |
| தேறிய இலாபம் | 474 | 154 |

## ஆதனம், பொறித் தொகுதி, கருவிகள்

குறிப்பு 12இல் உள்ள விபரங்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு ஆதனம், பொறித்தொகுதி உபகரணங்கள் ஆகியவற்றின் பதிவழிக்கப்பட்ட பெறுமதி, மூலப் பெறுமதியின் 43% ஆக உள்ள 1,304 மி. ரூபாவாக இருந்தது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலை 258 மில்லியன் ரூபாவாகும். இது பொறித்தொகுதி மற்றும் இயந்திரோபகரணங்கள் பதிலீடு செய்யப்படுதல் மற்றும் மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை தெளிவாகச் சுட்டிக் காட்டுகின்றன. சில வருடங்களுக்கு முன்னர் ஆழ் நிதியமொன்றில் நிதியங்கள் முதலீடு செய்யப்பட்டன. எவ்வாறெனினும், 2012ஆம் ஆண்டின் போது பங்கிலாபக் கொடுப்பனவுகளுக்கு நிதியங்கள் பயன்படுத்தப்பட வேண்டியேற்பட்டது.

இவ்வாண்டின் போது நிலையான சொத்துக்களுக்கு மேலதிகங்கள் 123 மில்லியன் ரூபாவாகும்.

## குறிக்கப்பட்ட மூலதனம்

80 மில்லியன் பங்குகளைக் கொண்டே வழங்கப்பட்ட மூலதனம் 800 மில்லியன் ரூபாவில் மாறுபடாமல் உள்ளது. எல்லா பங்குகளும் தனியே பொதுத் திறைசேரியின் செயலாளருக்கு சொந்தமானது. விபரங்கள் குறிப்பு இல 24இன் பிரகாரம் காணலாம்.

.

## ஒதுக்குகள் மற்றும் வைத்திருக்கப்படும் வருவாய்கள்

அமைச்சரவையின் அனுமதியின் பிரகாரம் 500 மி. ரூபா 2012ஆம் ஆண்டின் போது அரச வளங்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபன லிமிடட்டிற்கு முற்பணமாக செலுத்தப்பட்டதுடன், இது வரையில் மீள்செலுத்தப்படவில்லை.

இத்தொகையும் கிடைக்க வேண்டியவ ட்டியுமாக 512 மி. ரூபா மீளாய்வாண்டின் போது வைத்திருக்கப்படும் வருவாய்களுக்கு மாற்றப்பட்டது. இதன் விளைவாக வைத்திருக்கப்படும் வருவாய்கள் 512 மி. ரூபா இத்தொகையினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

## குறுங்கால நிதிசார் சொத்துக்கள்

குறுங்கால நிதிசார் சொத்துக்கள் 384 மில்லியன் ரூபாவில் இருந்து 965 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளன.

## வரி விதிப்பு

ஆண்டிற்கான அமுலில் உள்ள சாதாரண வரி வீதம் 28% ஆகும்.

எனினும், தாபனம் தமது ஏற்றுமதிகளுக்காக 12% சலுகை வரி வீதத்தினை அனுபவிக்கின்றது.வருமான வரிக்கு 54 மி. ரூபா ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### பங்குத் தகவல்கள்

ஒரு பங்கிற்கான அடிப்படை வருவாய் 2016ஆம் ஆண்டில் 1.93 ரூபாவுடன் ஒப்பிடுகையில் 2017இல் 5.92 ரூபாவிற்கு அதிகரித்துள்ளது.

### நிதி நிலைமைக் கூற்றுத் திகதிக்கு பின்னர் இடம்பெறும் நிகழ்

3 வருடங்களாக செய்லான் வங்கியினூடாக முதலீடு செய்யப்பட்ட 900 மில்லியன் ரூபா நிலையான வைப்பு 2018ஆம் ஆண்டின் போது செய்லான் வங்கியிலிருந்து பெறப்பட்ட 400 மி. ரூபா மேலதிகப்பற்று வசதியினையும் இலங்கை வங்கியிலிருந்து பெறப்பட்ட 100 மி.ரூபா மேலதிகப்பற்றினையும் சரிசெய்வதற்கு எடுக்கப்பட்டது.

நிதி நிலைமைக் கூற்றுத் திகதிக்கு பின்னர் சரிப்படுத்தல்கள் செய்ய வேண்டிய எவ்வித நிகழ்வும் ஏற்படவில்லை.

### தொழில் கொள்கைகள

2017.12.31ஆந் திகதியில் ஊழியர்களின் எண்ணிக்கை 695 ஆக இருந்தது. மீளாய்வாண்டினுள் முகாமை மனித வள முகாமைத்தவத்திற்கு கூடிய கவனஞ் செலுத்தியது.

பயிற்சிப் பட்டறைகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஊடாக ஊழியர் பயிற்சி நிகழ்ச்சிகள் 2017ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நடைபெற்றன.

### நியதிச்சட்டக் கொடுப்பனவுகள

பணிப்பாளர்களின் மிகச் சிறந்த அறிவிற்கும் நம்பிக்கைக்கும் அமைய ஊழியர் தொடர்பாகவும் அரசாங்கத்திற்கும் செலுத்த வேண்டிய அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுகளும் குறிப்பிட்ட திகதியில் உரிய முறையில் செலுத்தியுள்ளதாக திருப்தி கொண்டுள்ளது.

### பணிப்பாளர் குழு

தாபனத்தின் பணிப்பாளர் சபை பின்வருமாறு மாற்றமடைந்துள்ளது:

திரு. எம். குணரத்ன – தகுதி வாய்ந்த அதிகாரி

2017.02.07 முதல் 2017.03.19 வரை

- தலைவர்

2017.03.20 முதல் 2017.12.18 வரை (19.12.2017 இராஜினாமா செய்தார்)

திருமதி ஐ. ரணதுங்க – பணிப்பாளர்
2017.08.15 முதல் 2017.12.18

- பதில் தலைவர்

2017.12.19 முதல் இற்றை வரை

திரு. ஆர். ஹபீப் - நிறைவேற்றுப் பணிப்பாளர்

2017.08.15 முதல் 2017.12.11

- நிர்வாகப் பணிப்பாளர்

2017.12.12 முதல் இற்றை வரை

திருமதி. கே. எல். ரம்யகாந்தி - பணிப்பாளர்/ திறைசேரிப் பிரதிநிதி
2017.08.15 முதல் 2017.12.19 வரை

திரு.எஸ்.எல்.ஏ. ரஸ்ஸாக் - பணிப்பாளர்
2017.10.31 முதல் 2018.01.03 வரை.

### எதிர்காலத் திட்டங்கள்

நிறுவனத்தின் எதிர்காலத் திட்டங்கள் பின்வருவனவற்றைக் கொண்டுள்ளன :–

- ❖ புதிய உற்பத்திகள் மற்றும் இடங்களுக்குள் திசைதிருப்புதல்
- ❖ பெறுமதி கூட்டல் உற்பத்திகளுக்கு விரிவுபடுத்துதல்
- ❖ கோக்கிளாய் வடக்கு பகுதியில் சுருள் ஈர்ப்புச் செறிவு ஆலையினை நிறுவுதல்.
- ❖ தற்போதுள்ள பொறித் தொகுதியினை நவீனமயப்படுத்தலும் மேம்படுத்தலும்
- ❖ ரூட்டைல் மற்றும் சர்கோன் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு பிரிப்பான்களை பொருத்தியும் பழைய உயர் அழுத்த ரோலர் பிரிப்பான்களை பதிலீடு செய்தும் ரூட்டைல் பொறித்தொகுதியினை நவீனமயப்படுத்தல்
- ❖ ஈர உயர் அடர்த்தி இழுவிசைப் பிரிப்பான் பொறித்தொகுதியை நவீனமயப்படுத்துதல்.
- ❖ பொறித்தொகுதி செயற்பாடுகள் பகுதி“A”யிற்கு கடல் நீர் பம்பும் நீர்மூழ்கிக்குழாய்வழியினை நிறுவுதல்
- ❖ பொறித்தொகுதியின் “A” பகுதிக்கான டிரம்மல்லை (trammel) வடிவமைத்தல் மற்றும் அமைத்தல்
- ❖ பகுதி “A” கன்சென்றறேட் சைக்லோன் கோபுரத்தினை அமைத்தல்
- ❖ உலர் ஆலை மற்றும் ஈர ஆலையின் மின்சார அமைப்பினைத் திருத்துதல்.
- ❖ உள்ளக மின்சார விநியோகிப்புத் தொகுதியினை நவீனமயப்படுத்தல்.
- ❖ 11 kv பிரதான விநியோகத் தொகுதியினைப் பதிலீடுசெய்தல்
- ❖ உலர்ந்த சர்கோன் ஆலைக்கு fluidized bed dryer இனைக் கையாளுதல்.
- ❖ சிவில் இயந்திரவியல் மற்றும் மின்னியல் பட்டறைகளைத் தரமுயர்த்துதல்
- ❖ சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களுக்கு ஏற்ப ஆய்வுகூடத்தினை மேம்படுத்துதல்.
- ❖ சேதமடைந்துள்ள களஞ்சியசாலையினைப் பழுதுபார்த்தல்.
- ❖ சர்கோன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஈர ஆலைகளில் 09 பழைய ஈர நடுவண்களைப் பதிலீடு செய்தல்
- ❖ பழைய பகுதி “A” அமைப்பினை வலுவூட்டுவதற்கு ஆதார சட்டகத்தினைப் பொருத்துதல்
- ❖ ஆய்வுகூடத்திற்கு XRF இயந்திரத்தினைக் கொள்வனவு செய்தல்.
- ❖ வாகன சேவை நிலையங்களைப் புதுப்பித்தல்
- ❖ புத்தம்புது ஹைட்ராலிக் அகழ் இயந்தரம் மற்றும் பாரந்தூக்கி ஆகியவற்றைக் கொள்வனவு செய்தல்.
- ❖ சக்கர ஏற்றி மற்றும் டிராக்டர்களுக்கான கொட்டகைகளை அமைத்தல்

- பணிக்குழாத்தினர் விடுதிகளைப் புதுப்பிப்பதைத் தொடருதல்.
- பணிக்குழாத்தினர் விடுதிகளை மீள மின்கம்பியிடல்.
- தென்னைப் பயிர்ச்செய்கை மற்றும் வீடமைப்புத் திட்டம் ஆகியவற்றிற்கு பயன்படுத்தப்படும் கரையோரப் பகுதியினைப் பாதுகாப்பதற்கு கேபியன் மதிற் சுவரை அமைத்தல்
- பணிக்குழாத்தினரின் நலன்புரி வசதிகளை அதிகரித்தல்.
- ஊழியர்களுக்கு அவர்களது திறன்களை அபிவிருத்தி செய்து கொள்வதற்குப் பயிற்சிகளை வழங்குதல்.

## பணிப்பாளர்களின் பங்குடைமைகள்

பணிப்பாளர்களுக்கு நிறுவனத்தில் எவ்விதப் பங்குடைமையும் இல்லை. 100% பங்குடைமையும் பொதுத் திறைசேரி செயலாளருக்கு உரியதாகும்.

## கூட்டுச் சமூகப் பொறுப்பு

கூட்டுச் சமூகப் பொறுப்பினை நிறைவேற்றுவதற்காக தாபனம் 59,000/= ரூபாவினை மாத்திரம் செலவழித்தது. சமூக சேமநல நடவடிக்கைகள், சமய நடவடிக்கைகள், கல்வி நடவடிக்கைகள் என்பனவற்றிற்கு அனுசரணை வழங்கியது.

## ஒப்பந்தங்கள் தொடர்பாக பணிப்பாளர்களின் கடப்பாடு

தாபனத்துடன் செய்துள்ள அல்லது செய்ய உத்தேசித்துள்ள எவ்வித ஒப்பந்தம் தொடர்பாகவும் பணிப்பாளர்களின் நேரடி அல்லது மறைமுகக் கடப்பாடுகள் எதுவும் இல்லை.

## தாபன நிர்வாகம்/உள்ளகக் கட்டுப்பாடு

தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடு குறித்து தமக்கு உள்ள பொறுப்பினை பணிப்பாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். தாபனச் சொத்துக்களின் பாதுகாப்பு, உரிய கணக்கீட்டுப் பதிவுகளைப் பேணுதல், உருவாக்கப்பட்ட நிதித் தகவல்களின் நம்பகத்தன்மை ஆகியவற்றை மற்றவற்றுக்கிடையில் உறுதிப்படுத்தும் விதத்தில் இம்முறைமை வடிவமைக்கப்பட்டுள்ளது. எனினும், தவறுகள் மற்றும் ஒழுங்கின்மைகளை முற்றாக தடுத்துக் கொள்வதாக அன்றி, அவற்றைக் குறைத்துக் கொள்வதை

சாதாரண கால எல்லைக்குள் கண்டறிவதையே எந்தவொரு உள்ளக நிர்வாக முறைமையினாலும் உறுதிப்படுத்த முடியும்.

நிதி அறிக்கைகளை ஒப்பமிடும் நாள் வரையிலான கால எல்லைக்குள் உள்ளக நிர்வாக முறைமைகள் செயற்றிறன்மிக்கதாகச் செயற்பட்டதை இட்டு பணிப்பாளர்கள் திருப்தியடைந்துள்ளனர்.

## நிலைப்பாடு குறித்து அக்கறை

நிதி அறிக்கைகளைத் தயாரிக்கும் போது நிலைப்பாடு குறித்து அக்கறையின் அடிப்படையில் பணிப்பாளர்கள் செயலாற்றியுள்ளனர்.

## கணக்காய்வாளர்கள்

2016 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வெளிவாரி கணக்காய்வாளர்களாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் செயல்பட்டது.

## செயலாளர்கள்

வரையறுக்கப்பட்ட பீ.டப்ளியூ.கோப்பரேட் செக்ரடேரியல் (தனியார்) நிறுவனம் செயலாளர்களாக செயல்பட்டது

சபை ஆணைப்படி,
வரையறுக்கப்பட்ட பீ.டப்ளியூ.
கோப்பரேட் செக்ரடேரியல் (தனியார்)
லிமிடட்,
செயலாளர்கள்

பதில் கம்பனி செயலார்
சட்ட அதிகாரி/வாரியம் செயலாளர்
திருமதி. கமயந்தி குரே
இலங்கை கனிப்பொருள் மணல்
விமிடட்

# கடந்த ஐந்து வருடங்களுக்கான முக்கிய நிதிசார் தகவல்கள்

| | | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|
| மொத்த விற்பனை வருவாய் | - மில். ரூபா | 679 | 1,220 | 1,688 | 1,174 | 1,424 |
| மொத்த இலாபம் | - மில். ரூபா | 500 | 694 | 821 | 607 | 953 |
| ஏனைய வருமானம் | - மில். ரூபா | 56 | 56 | 136 | 55 | 134 |
| வரிக்கு முன்னரான இலாபம் | - மில். ரூபா | 30 | 328 | 503 | 170 | 535 |
| வரிக்கு பின்னரான இலாபம் | - மில். ரூபா | 20 | 329 | 457 | 154 | 474 |
| ஈர்க்கப்படாத மேந்தலைச் செலவினங்கள் | - மில். ரூபா | 358 | 259 | 277 | 305 | 325 |
| மொத்தச் சொத்துக்கள் | - மில். ரூபா | 2,400 | 2,829 | 2,764 | 3,100 | 3,489 |
| மொத்தப் பொறுப்புக்கள | - மில். ரூபா | 715 | 847 | 489 | 556 | 1,180 |
| பங்குடைமையாளரின் உரிமைப்பங்கு | - மில். ரூபா | 1,684 | 1,981 | 2,276 | 2,544 | 2,309 |
| வருமான வரி | - மில். ரூபா | 10 | (2) | 46 | 16 | 54 |
| திறைசேரிக்கான பங்கிலாபம் | - மில். ரூபா | 43 | 14 | 158.5 | 54 | 161 |
| ஊழியர்களின் எண்ணிக்கை | | 629 | 636 | 847 | 685 | 695 |
| உரிமைப்பங்கிற்கான வரியின் முன்னரான தேறிய இலாபம் | | 2% | 17% | 22% | 7% | 23% |
| மொத்த சொத்துக்களுக்கான வரியின் முன்னரான தேறிய இலாபம் | | 1% | 12% | 18% | 5% | 15% |
| நடப்பு வீதம் | | 2:1 | 2:1 | 4:1 | 4:1 | 3:1 |

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டியின் அறிக்கை

2017ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்ட எல்லா பணிப்பாளர்களும் நிறைவேற்றுப் பணிப்பாளர்கள் ஆவர். அதனால், கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டிக்கு உறுப்பினர் எவரும் நியமிக்கப்படவில்லை. அதன்படி, 2017ஆம் ஆண்டின் போது கூட்டுங்கள் எதுவும் நடாத்தப்படவில்லை.

தலைவர்,

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட்

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

| | | |
|---|---|---|
| மகே அංකය / எனது இல. / My No. | ஐஎம்பூ/ஏ/எஸ்எம்எஸ்எல்/ எஸ்டி/1/17/21 | |
| ඔබේ අංකය / உமது இல. / Your No. | | |
| දිනය / திகதி / Date | 2018 யூலை 31 | |

தலைவர்
இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட்

**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் கம்பனியின் ("கம்பனி") 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

**கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

(1) கடந்த மூன்று ஆண்டுகளின் போது, தற்போதைய இயந்திரம் ஆகக்குறைந்தது 40 சதவீத கனிப்பொருள் உள்ளடக்கத்தை கொண்டுள்ள மணலை செயன்முறைப்படுத்துவதற்கு முடிந்திருந்ததனால் முதல் மணல் இருப்பை (கட்டுமானக் கல் கனிப்பொருள் கழிவு (block A tailings)) செயன்முறைப்படுத்துவதற்கான தற்போதைய இயந்திரம் வடிவமைக்கப்பட்டதன் அடிப்படையில் ரூபா 607,463,314 பெறுமதியான 7.88 சதவீத மணல் உள்ளடக்கத்தைக் கொண்டிருந்த அத்தகைய இருப்பை கம்பனியின் முகாமைத்துவம் இனங்கண்டு கணக்கீடு செய்திருந்தது. எவ்வாறாயினும், தற்போதைய இயந்திரம் அத்தகைய இருப்பை செயன்முறைப்படுத்துவதற்கு திட்டமிட்டவாறு வடிவமைக்கப்பட்டிருக்காததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயன்முறைப்படுத்தப்படாமல் இருந்தது. இதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு இலாபம் மற்றும் இறுதி இருப்பு ரூபா 172,595,796 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(2) பொதுத் திறைசேரி மற்றும் அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் 2011 நவம்பர் 09 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், வரையறுக்கப்பட்ட அரச வளங்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபனத்திற்கு (எஸ்ஆர்எம்சீஎல்) வழங்கப்பட்ட ரூபா 500,000,000 தொகையான முற்பணம் மற்றும் அவற்றின் மீது பெறவேண்டிய ரூபா 12,421,448 தொகையான வட்டி என்பன நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்களிற்கெதிராக பதிவளிக்கப்பட்டிருந்ததுடன் நிலுவையாகவுள்ள முற்பணம் மற்றும் அதன் மீதான வட்டியை அறவிடுவதற்கு எஸ்ஆர்எம்சீஎல் இற்கெதிராக நீதிமன்ற வழக்கொன்றைக் கொண்டிருந்தது.

(3) அரசாங்க நிறுவனங்களிற்கான முற்பணமாக காட்டப்பட்ட ரூபா 45,000,000 தொகை ஆறு ஆண்டுகளிற்கு மேலாக அறவிடப்படாமல் காணப்பட்டது.

(4) ரூபா 5,308,330 வருமான வரி குறை ஏற்பாடு மீளாய்வாண்டின் வருமான வரி செலவின குறை ஏற்பாடாக சீராக்கம் செய்யப்படாமல் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

(5) கம்பனியானது அனுமதிக்க முடியாத படிகளை கழிப்பதன் மூலம் மீளாய்வாண்டின் வரிப் பொறுப்பை கணிப்பிட்டிருந்ததன் விளைவாக கம்பனியின் வரிப் பொறுப்பு ரூபா 8,673,621 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

## முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை கனிப்பொருள் மணல் லிமிட்டெட் கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

4

Auditor General's Department

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் பேணப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

**பாராளுமன்றத்திற்கான அறிக்கை**

அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கை காலக்கிரமத்தில் பட்டியல்படுத்தப்படும்

டபிள்யூ.பி.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

# விபரமான வருமானக் கூற்று

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|---|
| **மொத்த வருவாய்** | 3 | 1,424,358,555 | 1,173,915,676 |
| பெறுமதி சேர்க்கப்பட்ட வரி | | (98,081) | (326,289) |
| **தேறிய வருவாய்** | | 1,424,260,474 | 1,173,589,387 |
| விற்பனைச் செலவு | 4 | (471,561,438) | (566,332,585) |
| **மொத்த இலாபம்** | | 952,699,036 | 607,256,802 |
| ஏனைய தொழிற்படு வருமானம் | 5 | 37,101,717 | 3,083,602 |
| | | 989,800,753 | 610,340,404 |
| விநியோக செலவுகள் | 6 | (6,827,758) | (6,633,016) |
| நிர்வாகச் செலவுகள் | 7 | (179,889,185) | (170,221,121) |
| ஏனைய தொழிற்படு செலவினங்கள் | 8 | (364,943,423) | (315,324,692) |
| | | (551,660,366) | (492,178,829) |
| தொழிற்படு இலாபம் | | 438,140,387 | 118,161,575 |
| நிதி வருமானம் | 9 | 96,399,804 | 52,337,064 |
| **ஆண்டிற்கான வருமான வரிக்கு முன்னரான இலாபம்** | | 534,540,191 | 170,498,639 |
| வருமான வரிச் செலவுகள் | 10 | (60,940,329) | (16,360,033) |
| **ஆண்டிற்கான வருமான வரிக்கு பின்னரான இலாபம்** | | 473,599,862 | 154,138,606 |
| **ஆண்டிற்கான தேறிய இலாபம்** | | 473,599,862 | 154,138,606 |
| **பங்கொன்றிற்கான அடிப்படை வருவாய்** | 11 | 5.92 | 1.93 |
| **ஆண்டிற்கான தேறிய இலாபம்** | | 473,599,862 | 154,138,606 |
| இளைப்பாற்று நன்மை கடப்பாடுகள் மீதான தேறிய காப்புறுதி மதபீட்டு இலாபம் (நட்டம்) | | (12,598,135) | 2,859,003 |
| **ஆண்டிற்கான மொத்த விபரமான வருமானங்கள்** | | 461,001,727 | 156,997,609 |

# நிதி நிலைமைக் கூற்று

| திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு | குறிப்பு | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| சொத்து, பொறித்தொகுதி, கருவிகள் | 12 | 821,389,073 | 758,802,341 |
| குத்தகைக்கு எடுத்த சொத்துக்கள் | 13 | 20,813,639 | 21,645,046 |
| அருவச் சொத்துக்கள் | 14 | 468,479 | 357,054 |
| முற்பணம் | 15 | 45,000,000 | 557,421,448 |
| மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள் | | 887,671,191 | 1,338,225,889 |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | |
| பொருட்பதிவேடுகள் | 16 | 1,270,630,969 | 948,590,005 |
| குறுங்கால நிதிச் சொத்துக்கள் | 17 | 65,215,069 | 18,981,226 |
| நிலையான வைப்புக்கள் | 18 | 900,000,000 | 365,313,874 |
| முற்பணங்கள் மற்றும் வைப்புக்கள் | 19 | 49,191,331 | 46,955,953 |
| முன்செலுத்தப்பட்ட செலவினங்கள் | 20 | 7,076,726 | 32,618,903 |
| ஏனைய கிடைப்பனவுகள் | 21 | 309,125,599 | 302,938,689 |
| வருமான வரி கிடைப்பனவுகள் | 22 | -- | 20,918,976 |
| காசும் காசுக்கு சமமானவைகளும் | 23 | 35,346,730 | 25,353,081 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | 2,636,586,424 | 1,761,670,707 |
| மொத்த சொத்துக்கள் | | 3,524,257,615 | 3,099,896,596 |
| **உரிமைப்பங்கு மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **உரிமைப்பங்கு** | | | |
| குறிக்கப்பட்ட மூலதனம் | 24 | 800,000,000 | 800,000,000 |
| ஏனைய ஒதுக்குகள் | 25 | 906,544,343 | 906,544,343 |
| வைத்திருக்கப்படுகின்ற வருவாய்/(நட்டம்) | 26 | 602,029,845 | 837,317,294 |
| மொத்த பங்குதாரர் உரிமைப் பங்கு | | 2,308,574,188 | 2,543,861,637 |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| இளைப்பாற்று நன்மை கடப்பாடுகள் | 27 | 68,012,638 | 58,424,744 |
| பிற்போடப்பட்ட வரிவிதிப்பு | 28 | 55,901,318 | 48,460,989 |
| செலுத்தவேண்டிய வருமான வரி | 29 | 24,357,801 | -------- |
| | | 148,271,757 | 106,885,733 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | |
| வியாபாரம் மற்றும் ஏனைய கடன் வழங்குவோர் | 30 | 466,731,800 | 404,937,520 |
| ஏற்பாடுகள் மற்றும் சேரும் செலவினங்கள் | 31 | 64,431,082 | 44,211,706 |
| குறுங்காலக் கடன் --- மேலதிகப்பற்று | 32 | 536,248,788 | --------- |
| | | 1,067,411,670 | 449,149,226 |
| மொத்த பொறுப்புக்கள் | | 1,215,683,427 | 556,034,959 |
| மொத்த உரிமைப்பங்கு மற்றும் பொறுப்புக்கள் | | 3,524,257,615 | 3,099,896,596 |

தயாரிக்கப்பட்டுள்ளன என்பதனை நான் உறுதிப்படுத்துகின்றேன்.

ஒப்பம் -திருமதி டப்ளியு.கே. தமாரா -**தலைமை நிதி உத்தியோகத்தர்**

இந்நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் சமர்ப்பித்தலுக்கும் பணிப்பாளர் சபை பொறுப்பாக உள்ளது. சபையின் சார்பாகவும் அதற்காகவும் அங்கீகரிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்டுள்ளது.

ஒப்பம - திருமதி ஐ. ரணதுங்க - பதில் தலைவர் ஒப்பம - ஆர். ஹபீப்- நிர்வாகப் பணிப்பாளர

திகதி: 2018 ஜூலை 24

## டிசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமையாண்மை மாற்றம் குறித்த கூற்று

ரூபா

| | குறிக்கப்பட்ட மூலதனம் | வைத்திருக்கப்படுகின்ற வருவாய் | மிதவைப்படகு காப்புறுதி ஆழ் நிதிய ஒதுக்கு | பதிலீடு /தரமுயர்த்தல் பொறித்தொகுதி மற்றும் இயந்திராதிகள் ஆழ் நிதிய ஒதுக்கு | தலைமை அலுவலகக் கட்டட ஆழ் நிதிய ஒதுக்கு | ஊழியர் ஒதுக்கு நஷ்டஈட்டு ஆழ் நிதிய | சுனாமி பழுதுபார்த்தல் ஆழ் நிதிய ஒதுக்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2016 **ஜனவரி 01 ஆந் திகதியன்று நிலுவை** | 800,000,000 | 631,093,031 | 111,000,000 | 706,346,960 | 171,149,672 | 10,246,237 | 18,801,474 | 2,448,637,374 |
| வருடத்திற்கான மொத்த விபரமான வருமானம் | ------- | 154,138,606 | ------- | ------- | ------- | ------- | ------- | 154,138,606 |
| வருடத்திற்கான ஏனைய விபரமான வருமானம் | ------- | 2,859,003 | ------- | ------- | ------- | ------- | ------- | 2,859,003 |
| மிதவைப்படகு ஆழ் நிதிய செம்மையாக்கம் | ------- | 111,000,000 | (111,000,000) | ------- | ------- | ------- | ------- | ------ |
| W.H.T செம்மையாக்கம் | ------- | 163,066 | ------- | ------- | ------- | ------- | ------- | 163,066 |
| Y/A 2015/2016 வருமான வரி ஏற்பாட்டின் கீழ் | ------- | (7,988,412) | ------- | ------- | ------- | ------- | ------- | (7,988,412) |
| திறைசேரிக்கான பங்கிலாபம் | ------- | (53,948,000) | ------- | ------- | ------- | ------- | ------- | (53,948,000) |
| 2016 **டிசெம்பர் 31 ஆந் திகதியன்று நிலுவை** | 800,000,000 | 837,317,294 | -------- | 706,346,960 | 171,149,672 | 10,246,237 | 18,801,474 | 2,543,861,637 |
| **2017 ஜனவரி 01 ஆந் திகதியன்று நிலுவை** | 800,000,000 | 837,317,294 | -------- | 706,346,960 | 171,149,672 | 10,246,237 | 18,801,474 | 2,543,861,637 |
| வருடத்திற்கான மொத்த விபரமான வருமானம் | ------- | 473,599,862 | ------- | ------- | ------- | ------- | ------- | 473,599,862 |
| வருடத்திற்கான ஏனைய விபரமான வருமானம் | ------- | (12,598,135) | ------- | ------- | ------- | ------- | ------- | (12,598,135) |
| பங்குவீத உரிமை செம்மையாக்கம் | ------- | (17,559,398) | ------- | ------- | ------- | ------- | ------- | (17,559,398) |
| Y/A 2016/2017 வருமான வரி ஏற்பாட்டின் கீழ் | ------- | (5,308,330) | ------- | ------- | ------- | ------- | ------- | (5,308,330) |
| அரச வளங்கள் முகாமைத்துவத்தின் செம்மையாக்கம் | ------- | (512,421,448) | ------- | ------- | ------- | ------- | ------- | (512,421,448) |
| திறைசேரிக்கான பங்கிலாபம் | ------- | (161,000,000) | ------- | ------- | ------- | ------- | ------- | (161,000,000) |
| **2017 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று நிலுவை** | 800,000,000 | 602,029,845 | -------- | 706,346,960 | 171,149,672 | 10,246,237 | 18,801,474 | 2,308,574,188 |

# காசுப்பாய்ச்சல் கூற்று

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|
| **வரிவிதிப்புக்கு முன்னரான இலாபம்/ (நட்டம்)** | 534,540,191 | 170,498,639 |
| **சீராக்கல்கள் :** | | |
| பெறுமானத்தேய்வு மற்றும் கடன் தீர்ப்பனவு | 74,500,678 | 75,839,656 |
| வட்டி வருமானம் | (96,399,804) | (52,337,064) |
| பணிக்கொடை | 10,374,656 | 11,708,997 |
| திட்டமிடப்பட்ட சொத்துக்களின் நியாயமான பெறுமதி | (270,726) | (256,203) |
| ஓய்வூதிய நலன் பொறுப்புக்கள் மீதான காப்புறுதி இழப்பு | 12,598,135 | ------ |
| சொத்து, பொறித்தொகுதி, கருவிகள் விற்பனை மீதான இலாபம் | (3,249,932) | (1,025,093) |
| **செயற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்** | 532,093,198 | 204,428,932 |
| பொருட்பதிவுகளில் (அதிகரிப்பு)/ குறைவு | (322,040,964) | 28,441,335 |
| வியாபாரம் மற்றும் ஏனைய வருமதிகளில் (அதிகரிப்பு)/ குறைவு | 17,119,890 | (244,804,859) |
| வியாபாரம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளில் (அதிகரிப்பு)/ குறைவு | 61,794,779 | 62,049,358 |
| கடன் வசதிகளில் (அதிகரிப்பு)/ குறைவு | --------- | -------- |
| **செயற்பாடுகளில் இருந்து தோற்றுவிக்கப்பட்ட பணம்** | 288,966,903 | 50,114,766 |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (13,114,170) | (13,720,373) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (5,000,000) | (30,893,654) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு** | 270,852,733 | 5,500,739 |
| | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| முதலீடுகளில் உள்ள வைப்புக்கள் | (686,887,780) | 108,612,596 |
| வட்டி வருமானம் | (96,399,804) | (52,337,064) |
| முடிவுறாத மூலதன வேலை | (13,233,654) | (52,106,097) |
| சொத்து, பொறித் தொகுதி, கருவிகள் மற்றும் அருவச் சொத்துக்களைக் கைப்பற்றுதல் | (3,836,584) | (4,568,344) |
| சொத்து, பொறித்தொகுதி, கருவிகளை அகற்றுவது மூலம் பெற்ற தொகை | 3,249,950 | 1,794,197 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்** | (797,107,872) | 1,395,288 |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| செலுத்திய பங்கிலாபம் | ---------- | -------- |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்** | ---------- | -------- |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவை மீதான தேறிய அதிகரிப்பு/(குறைப்பு)** | (526,255,139) | 6,896,027 |
| வருட ஆரம்ப காலப்பகுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை | 25,353,081 | 18,457,054 |
| **இறுதிக் காலப்பகுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை** | (500,902,058) | 25,353,081 |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவையின் பகுப்பாய்வு** | | |
| வங்கியிலிருக்கும் பணம் | (501,054,053) | 25,178,229 |
| கையிருப்பில் உள்ள பணம் | 51,995 | 154,852 |
| சில்லறைப் பணம் | 100,000 | 20,000 |
| | (500,902,058) | 25,353,081 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்
2017 திசெம்பர் 31ஆந் திகதியுடன் ஆண்டிற்கானது

## 1. தாபனத் தகவல்கள்

### 1.1 பொது

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட் இலங்கை அரசாங்கத்திற்கு முழுமையாக சொந்தமான இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 341/21, சரண மாவத்தை, இராஜகிரியவில் அமைந்துள்ளது.

### 1.2 பிரதான வியாபார நடவடிக்கைகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

பாரமான கனிப்பொருள் மணலை அகழ்தல், பதப்படுத்தல், சந்தைப்படுத்தல் ஆகியனவே கம்பனியின் பிரதான செயற்பாடாகும்.

### 1.3 ஊழியர் எண்ணிக்கை

வருட இறுதியில் தாபனத்தின் ஊழியர்களின் எண்ணிக்கை 695 ஆகும்.

## 2. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

### 2.1 தயாரித்தலின் அடிப்படை

இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடட்டின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் - SLFRSs) இணங்க தயார் செய்யப்பட்டுள்ளன. இந்நிதிக் கூற்றுக்கள் சரித்திரச் செலவு மரபின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. நிதிக் கூற்றுக்கள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு (SLFRSs) அனுகூலமாகத் தயாரிக்கும் போது நம்பகமான கணக்கீட்டு மதிப்பீடுகளைப் பயன்படுத்துதல் அவசியமாகும். அத்துடன், முகாமை கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிக்கும் படிமுறைகளின் போது, முகாமையின் தீர்ப்புக்களும் அடிப்படையாகக் கொள்ளப்படும். இவ்வாறு பிரயோகிக்கப்படும் மேற்படி உயர் முகாமைத்துவ தீர்ப்புகள்அல்லது சிக்கல்கள் தொடர்பான விடயப்பரப்புக்கள் அல்லது நிதிக் கூற்றுக்களுக்கு முக்கியமான மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள் உள்ள பகுதிகள் என்பன குறிப்பு இல 2A யில் காட்டப்பட்டுள்ளன.

### 2.2 கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்

கடந்த வருடத்தின் நிதிக் கூற்றுக்களுக்கான சமர்ப்பித்தல் மற்றும் வகைப்படுத்தல் என்பன சிறந்த சமர்ப்பித்தலுக்காவும் நடப்பு ஆண்டில் ஏனையவற்றுக்கு சமமாக இருக்கக் கூடிய விதத்திலும் திருத்தப்பட்டுள்ளன.

## 2.3 வெளிநாட்டு நாணய மற்றம்

### 2.3.1 முன்வைத்தல் மற்றும் தொழிற்படு நாணயப் புழக்கம்

இந்நிதிக் கூற்றுக்களில் உள்ள கொடுக்கல் வாங்கல் மற்றும் நிலுவைகள் என்பன நிறுவனம் செயற்படும் ஆரம்ப பொருளாதாரச் சூழலுக்குரிய நாணயத்தினைப் பயன்படுத்தி அளவிடப்பட்டுள்ளன. நிறுவனத்தின் சமர்ப்பிப்பதற்கான புழக்கதில் இருக்கும் நாணயமான இலங்கை ரூபாயைப் (LKR) பயன்படுத்தி நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

### 2.3.2 கொடுக்கல் வாங்கல் மற்றும் நிலுவைகள்

கொடுக்கல் வாங்கல் நடைபெறும் தினத்தில் நிலவிய செலாவணி வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டு நாணயத்தினால் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல் தொழிற்படு நாணயத்திற்கு மாற்றப்பட்டது. அவ்வாறான சரிப்படுத்தல்களின் விளைவாகவும் வெளிநாட்டு நாணயத்தில் குறிக்கப்பட்டுள்ள நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வருட இறுதி மாற்றல் வீதங்களின் மாற்றங்களாலும் ஏற்படக்கூடிய அந்நிய செலாவணி இலாபங்களும் நட்டங்களும் விபரமான வருமானக் கூற்றில் காட்டப்பட்டுள்ளன.

## 2.4 சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள்

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் என்பன நிறுவனத்தின் முகாமையால் எதிர்பார்க்கப்படும் விதத்தில் பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு கொண்டுவருவதற்கு மேற்கொள்கொள்ளும் செலவுகள் உள்ளடங்களாக ஆரம்பத்தில் செலவினத்தில் பதியப்பட்டன.

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் மீதான செலவுகளிலிருந்து திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட பெறுமதி இழப்பு நட்டங்கள் ஆகியவற்றை கழித்து வரும் பெறுமதியில் கணிப்பிடப்பட்டன.

அச்செலவினால் சொத்தின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுகாலத்தை நீடிக்க முடிந்தால் அதனால் உருவாகும் இலாபங்கள் தாபனத்திற்கு கிடைத்தாலேயே பிந்திய கால செலவுகள் சொத்துக்களின் காவுகைத் தொகையில் உள்ளடக்கவோ அல்லது சொத்தாகவோ இனங்காணப்படுவதுடன், தாபனத்தால் அச்செலவினை நம்பகமான முறையில் அறவிட முடிகின்றது. ஏனைய எல்லா சொத்துக்களையும் நாளாந்தம் பராமரிப்பதற்கும் பேணுவதற்கும் மேற்கொள்ளும் செலவுகள் விபரமான வருமானக் கூற்றில் உரிய காலப்பகுதிக்கான செலவாகக் கருதப்படும்.

காணிகள் பெறுமதி இறக்கஞ் செய்யப்படுவதில்லை. ஏனைய சொத்துக்களின் தேய்மானம் நேர்கோட்டு முறைமையைப் பயன்படுத்தி கீழே காட்டப்பட்டவாறு மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்திற்குள் செலவு ஒதுக்கப்பட்டு அளவிடப்படும்:

| | | |
|---|---|---|
| வேலைத்தள அபிவிருத்தி | 20 வருடங்கள் | 5% |
| கட்டடங்கள் | 20 வருடங்கள் | 5% |

| | | |
|---|---|---|
| பொறித்தொகுதி மற்றும் இயந்திராதிகள் | 10 வருடங்கள் | 10% |
| தளர்வான கருவிகள் மற்றும் உபகரணங்கள் | 10 வருடங்கள் | 10% |
| தளபாடங்கள், பொருத்திகள் மற்றும் உபகரணங்கள் | 10 வருடங்கள் | 10% |
| மோட்டார் வாகனங்கள் | 5 -6.5 வருடங்கள் | 15%-20% |
| நீர் வழங்கல் | 10 வருடங்கள் | 10% |
| மிதவைப் படகுகள் | 10 வருடங்கள் | 10% |
| சகதிச் சுரங்கங்கள் | 4 வருடங்கள் | 25% |
| கணினி வன்பொருள் | 4 வருடங்கள் | 25% |

சொத்தின் காவுகைத் தொகை அதன் மதிப்பிடப்பட்ட மீளப்பெறக்கூடிய தொகையை விடக் கூடுதலாக இருப்பின், அச்சொத்தின் காவுகைத் தொகை உடனடியாக மீளக் கிடைக்கக்கூடிய தொகையில் பதிவுசெய்யப்படும்.

## 2.5 அருவச் சொத்துக்கள்

விசேட கணினி மென்பொருள் மற்றும் முறைமைகளைக் கைப்பற்றுவதற்கு மேற்கொள்ளும் செலவு கைப்பற்றப்பட்ட கணினி மென்பொருள் மற்றும் தொழிற்படும் தொகுதியாக மூலதனமாக்கப்பட்டுள்ளது. கைப்பற்றப்பட்ட அருவச் சொத்துக்கள் செலவிலிருந்து திரண்ட கடன் தீர்ப்பனவு மற்றும் திரண்ட பெறுமதி இழப்பு நட்டங்களைக் கழித்து செலவில் கணிக்கப்பட்டுள்ளன. இச்செலவுகள் அவற்றின் மதிப்பிடப்பட்ட பயன்தரு ஆயுட்காலத்திற்குள் பின்வருமாறு கடன் கழிப்பு செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| கணினி மென்பொருள் | 4 வருடங்கள் | 25% |

கணினி மென்பொருள் பேணல் தொடர்பான செலவினங்கள் குறிப்பிட்ட செலவு மேற்கொள்ளப்பட்ட காலத்தின் செலவாகக் கருதப்படும்.

## 2.6 நிதி சாரா சொத்துக்கள் மீதான பெறுமதி இழப்பு

ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலும் தாபனத்தால் அதன் சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகள் மற்றும் அருவச் சொத்துக்கள் மீதான காவுகைப் பெறுமானங்கள் குறித்து மீளாய்வு செய்ய வேண்டியுள்ளதுடன், அச்சொத்துக்கள் தொடர்பாக ஏதேனும் பெறுமதி இழப்புக்கான அறிகுறிகள் இருக்கின்றனவா என உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு ஏதேனும் அறிகுறிகள் இருப்பின், பெறுமதி இழப்பு நட்ட(இருப்பின்) அளவினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உரிய சொத்தின் மீளக் கிடைக்கக் கூடிய பெறுமதி மதிப்பீடு செய்யப்படும். ஒவ்வொரு சொத்தினதும் மீள அறவிடக்கூடிய பெறுமதியினை மதிப்பீடு செய்யவதற்கு முடியாத சந்தர்ப்பத்தில் பண உருவாக்கற் கூறாகக் கருதி, சொத்துக்கள் உரியதாகும் காசு உருவாக்கற் கூறின் மீள அறவிடக்கூடிய பெறுமதியினை மதிப்பீடு செய்ய தாபனம் முடிவு செய்யும்.

விற்பனை மீதான செலவினங்களைக் கழித்த நியாயமான பெறுமதியையும் நடப்பிலுள்ள பெறுமதியையும் விடக் கூடுதலான பெறுமதியே மீள் அறவிடக்கூடிய பெறுமதி ஆகும். நடப்பிலுள்ள பெறுமதியை மதிப்பீடு செய்கையில், வரிக்கு முன்பான கழிவு வீதத்தினைப்

பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட எதிர்கால பணப்பாய்ச்சல்கள் அவற்றின் தற்போதைய பெறுமதிக்கு கழிக்கப்படும். அக்கழிவு வீதம் பணத்தின் மீதான காலப் பெறுமதியின் நடப்பிலுள்ள சந்தை மதிப்பீடுகளையும் எதிர்கால காசுப் பாய்ச்சல்கள் செம்மைப்படுத்தப்படாத மதிப்பீடுகளுக்கான சொத்துக்களில் குறிப்பிட்ட இழப்பு நேரிடக்கூடிய நிலையையும் பிரதிபலிக்கின்றன.

ஒரு சொத்தின் மீள அறவிடக்கூடிய தொகை (அல்லது பண உருவாக்கற் கூறு) அதன் காவுகைத் தொகையைவிடக் குறைவாக மதிப்பபீடு செய்யப்படும், சொத்தின் காவுகைத் தொகை (அல்லது பண உருவாக்கற் கூறு) அதன் மீள அறவீட்டுத் தொகைக்கு குறைக்கப்படும். பெறுமதி அழப்பு நட்டமானது விபரமான வருமானக் கூற்றில் உடனடியாக இனங்காணப்படும்.

## 2.7 நிதிச் சொத்துக்கள்

### 2.7.1 வகைப்படுத்துதல்

ஆரம்ப இனங்காணலாக தாபனம் அதன் நிதிச் சொத்துக்களை கடன்களாகவும் வருமதிகளாகவும் வகைப்படுத்தலை பின்வருமாறு உறுதிப்படுத்துகின்றது:

#### கடன்கள் மற்றும் வருமதிகள்

கடன்கள் மற்றும் வருமதிகள் என்பன நிரந்தரமாகவும் உறுதியாகவும் செயற்படு சந்தையில் பட்டியலிடப்படாத மரபு சாரா நிதிச் சொத்துக்களாகும். நடைமுறையற்ற சொத்துக்கள் என வகைப்படுத்தப்பட்ட, அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதிக்கு பின்னரான 12 மாதங்களை விடக் கூடிய முதிர்ச்சிகளைத் தவிர, கடன்களும் வருமதிகளும் நடைமுறைச் சொத்துக்களுக்குள் உள்ளடக்கப்படுகின்றன. அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியின் போதுள்ள வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள், மீள்கொள்வனவு செய்யக்கூடிய அரசாங்கப் பிணைகள், அரச நிறுவனங்களில் முதலீடுகள், தற்காலிக மிகை நிதியம், முற்கொடுப்பனவுகள், வைப்புக்கள், ஊழியர்க்கு வழங்கிய கடன்கள், காசும் காசுக்கு சமமானவையும் ஆகியவை தாபனத்தின் கடன்கள் மற்றும் வருமதிகளில் உள்ளடங்குகின்றன.

### 2.7.2 இனங்காணல் மற்றும் ஆரம்ப மதிப்பீடு

கடன்கள் மற்றும் வருமதிகளாக வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்கள், தாபனம் கொடுக்கல் வாங்கலில் முதலில் ஈடுபட்ட நாளிலேயே வகைப்படுத்தப்படும். நிதிச்சொத்தொன்று ஆரம்பத்தில் நியாயமான பெறுமானத்தையும் நேரடி கொடுக்கல் வாங்கல் செலவுகளையும் கூட்டுவதன் மூலம் மதிப்பிடப்படும்.

நிதிச் சொத்துக்களிலிருந்து காசுப் பாய்ச்சல் பெறுவதற்கான உரிமை காலாவதியாகும் போது அல்லது வேறு தரப்பினருக்கு மாற்றும் போது மற்றும் தாபனம் நிதிச் சொத்துக்களின் எல்லா ஐயப்பாடானதும் விளைவுமிக்கதுமான உரிமையுடைமையினை மாற்றிய போதும் நிதிச்சொத்துக்களை இனங்காண்பது நிறுத்தப்படும்.

### 2.7.3 பிற்கால மதிப்பீடு

ஆரம்ப இனங.காணலின் பின்னர், கடன்களும் வருமதிகளும் விளைபயன்மிக்க வட்டி முறைமையைப் பயன்படுத்தி பெறுமதி இழப்பினைக் கழித்து கடன் கரைப்புச் செலவில் அளவிடப்படும்.

### 2.7.4 நிதிச் சொத்துக்களளின் பெறுமதி இழப்பு கடன் கரைப்புச் செலவு மீதான சொத்துக்கள்

தாபனம் எல்லா அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியிலும் நிதிச் சொத்தொன்றில் பெறுமதி இழப்பு ஏற்படுவதற்கு நிச்சயமான ஆதாரம் உள்ளதா என மதிப்பீடு செய்யும். சொத்தின் ஆரம்ப வகைப்படுத்தலின் பின்னர் (நட்ட நிகழ்வு) நடைபெறும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகளின் காரணமாக தெளிவான ஆதாரம் இருந்தாலேயே, நிதிச் சொத்தொன்றில் பெறுமதி இழப்பு ஏற்படும் அல்லது பெறுமதி இழப்புக்கு ஆளாகும். மேலும் அந்நட்ட நிகழ்வு (அல்லது நிகழ்வுகள்) நம்பகமான முறையில் மதிப்பிடப்படக் கூடிய நிதிச் சொத்துக்கள் மீதான மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களில் பாதிப்பை ஏற்படுத்தும்.

கடன் கரைப்புச் செலவில் மேற்கொள்ளப்படும் கடன்கள் மற்றும் வருமதிகளுக்கான இழப்புத் தொகை, நிதிச் சொத்துக்களின் மூல விளைபயன் மிக்க வரி வீதத்தில் கழிக்கப்பட்டு (இன்னும் நடைபெற்றிராத எதிர்கால கடன் நட்டங்கள் தவிர்ந்த) சொத்துக்களின் காவுகைத் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால் காசுப் பாய்ச்சல்களின் நடப்பிலுள்ள பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசமாக அளவிடப்படும். நிதிச் சொத்துக்களின் காவுகைத் தொகையானது கழிக்கப்படுவதுடன், நட்டத் தொகையானது விபரமான வருமானக் கூற்றில் வகைப்படுத்தப்படும்.

பிற்காலப்பகுதியில் பெறுமதி இழப்பு நட்டங்கள் குறைந்தாலோ மற்றும் பெறுமதி இழப்பு இனங்காணப்பட்டதன் பின்னர் ஏற்படும் நிகழ்வுடன் தொடர்புபடுத்த முடிந்தாலோ முன்பு இனங்காணப்பட்ட பெறுமதி இழப்புவட்டத்தின் பின்னடைவு விபரமான வருமானக் கூற்றில் வகைப்படுத்தப்படும்.

### 2.8 இருப்புக்கள் பதிவு

இருப்புக்கள் பதிவு குறைந்த செலவில் அல்லது தேறிய பணமாக தேறும் பெறுமதியில் குறிக்கப்படும். செலவு நிறையளிக்கப்பட்ட சராசரி செலவு (WAC) அடிப்படையில் தீர்மானிக்கப்படும். தேறிய பணமாகத் தேறக்கூடிய பெறுமதியானது எல்லா மதிப்பீடு செய்யப்பட்ட விற்பனை பூர்த்தியாகும் செலவு மற்றும் விற்பனையை மேற்கொள்வதற்குத் தேவையான செலவு ஆகியவற்றை சரக்கிருப்புக்களுக்கான விற்பனை விலையை கழித்து மதிப்பீடு செய்யப்படும்.

### 2.9 வர்த்தக வருமதிகள்

வர்த்தக வருமதிகளாவன சாதாரண வர்த்தக நடவடிக்கைகளில் விற்கப்பட்ட பொருட்களுக்கான வாடிக்கையாளரிடமிருந்து கிடைக்க வேண்டிய தொகையாகும். வர்த்தக நடவடிக்கைகளின் சாதாரண தொழிற்படு வட்டத்தில் சேகரித்தல் எதிர்பார்க்கப்படுவதுடன், அவை நடைமுறைச் சொத்தக்களாக வகைப்படுத்தப்படும்.

வர்த்தக வருமதிகள் ஆரம்பத்தில் விலைப்பட்டியல் பெறுமானமான நியாயமான பெறுமதியில் இனங்காணப்பட்டதன் பிற்பாடு பணத்தின் நேரப் பெறுமதி முக்கியமற்றதாக உள்ள குறுகிய காலப்பகுதில் கிடைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி இழப்பிற்கான ஏற்பாடுகளை கழித்து முதல் விலைப்பட்டியல் பெறுமதியில் அளவிடப்பட்டன.

தாபனம் அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் வர்த்தக வருமதிகளில் பெறுமதி இழப்பு ஏற்படுவதற்கு நிச்சயமான ஆதாரம் உள்ளதா என மதிப்பீடு செய்யும். வர்த்தக வருமதிகளுக்கான பெறுமதி இழப்பின் தெளிவான ஆதாரத்தில் கொடுப்பனவுகள் சேகரித்தல் மீதான தாபனத்தின் கடந்த கால அனுபவங்கள், தாமதித்த கொடுப்பனவுகள் எண்ணிக்கையில் அதிகரிப்பு என்பன அடங்குகின்றன. வர்த்தகக் கிடைப்பனவுகளில் பெறுமதி இழப்பு ஏற்படும் மற்றும் பெறுமதி இழப்புக்கான தெளிவான ஆதாரம் இருந்தாலேயே பெறுமதி இழப்பிற்கு ஆளாகும்.

## 2.10 காசும் காசுக்கு சமமானவையும்

காசுப் பாய்ச்சல்கள் மீதான கூற்றில் காசும் காசுக்கு சமமானவைகளில் கையிலுள்ள பணம், வங்கியிலுள்ள கோரிக்கை வைப்புக்கள், மூன்று அல்லது அதற்கு குறைவான மாத ஆரம்ப முதிர்ச்சிகளைக் கொண்ட ஏனைய குறுங் கால திரவத்தன்மைமிக்க முதலீடுகள் என்பன அடங்கும்.

## 2.11 குறிக்கப்பட்ட மூலதனம்

குறிக்கப்பட்ட மூலதனம் வெளியிடப்பட்ட பங்குகள் மீதான பெறுமதியைக் குறிக்கும். சாதாரண பங்குகள் உரிமைப் பங்காக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## 2.12 நிதிசார் பொறுப்புக்கள்

தாபனம் நிதிசார் பொறுப்புக்களை ஏனைய நிதிசார் பொறுப்புக்களில் வகைப்படுத்துகின்றது. தாபனத்தின் ஏனைய நிதிசார் பொறுப்புக்களில் வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அடங்குகின்றன. ஆரம்பத்தில் ஏனைய நிதிசார் பொறுப்புக்கள் நியாயமான பெறுமதியுடன் நேரடிப் பகிரக்கூடிய கொடுக்கல் வாங்கல் செலவுகளைக் கூட்டுவதன் மூலம் இனங்காணப்பட்டன. ஆரம்ப இனங்காணலின் பிற்பட்ட காலத்தில் இந்நிதிசார் பொறுப்புக்கள் பணத்தின் நேரடிப் பெறுமதி முக்கியமற்றதாக உள்ள குறுகிய காலப்பகுதில் கிடைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி முதல் விலைப்பட்டியல் பெறுமதியில் அளவிடப்பட்டது.

தாபனம் நிதிசார் பொறுப்பொன்றை அதன் ஒப்பந்த ரீதியான கடப்பாடுகள் தீர்க்கப்படும் போது, இரத்துச் செய்யப்படும் போது அல்லது காலாவதியாகும் போது இனங்காண்பதை நிறுத்தும்.

## 2.13 வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்

வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் என்பது வழங்குனர்களிடமிருந்து சாதாரண வர்த்தக நடக்கைகளின் போது பெறப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கு செலுத்த வேண்டிய கடப்பாடுகளாகும். வர்த்தக மற்றும்' ஏனைய கொடுப்பனவுகள் சாதாரண தொழிற்படு வர்த்தக வட்டத்தில் இருப்பதால் நடைமுறை பொறுப்புக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் விலையான நியாயமான விலையில் இனங்காணப்பட்டது. பிற்பட்ட காலத்தில் இந்நிதிசார் பொறுப்புக்கள் பணத்தின் நேரடிப் பெறுமதி முக்கியமற்றதாக உள்ள குறுகிய காலப்பகுதில் கிடைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட பெறுமதி முதல் விலைப்பட்டியல் பெறுமதியில் அளவிடப்பட்டது.

## 2.14 நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரி

இது நடைமுறை மற்றும் பிற்போடப்பட்ட வரியைக் கொண்ட காலப்பகுதிக்கான வரிச் செலவு ஆகும். விபரமான வருமானக் கூற்றில் வரி வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய விபரமான வருமானங்களுக்குரிய உருப்படிகளுக்கு தொடர்பான அளவுக்கு மாற்றமாக, வரியானது விபரமான வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. இவ்வகையில், வரி ஏனைய விபரமான வருமானத்திலும் இனங்காணப்பட்டுள்ளது.

நடைமுறை வருமான வரிக் கட்டணம் அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் தாபனத்திற்கும் வரி விதிக்கக்கூடிய வருமான உருவாக்கத்திற்கும் ஏற்படுத்தப்பட்டுள்ள வரிச் சட்டங்களின் அடிப்படையில் கணிக்கப்படும். வரி அதிகார சபைகளுக்கு செலுத்த வேண்டிய எதிர்பார்க்கப்பட்ட தொகைகளின் அடிப்படையில்சந்தர்ப்பங்களுக்கு ஏற்றவாறு தாபனம் ஏற்பாடுகளை ஒதுக்கியுள்ளது.

பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்பக்கள் மீதான வரி அடிப்படைகளுக்கும் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படும் அவற்றின் தொகைகளுக்கும் இடையில் எழும் தற்காலிக வித்தயாசங்கள் மீது இனங்காணப்படும். அக் கொடுக்கல் வாங்கலினால் கணக்கீடோ அல்லது வரிவிதிக்கக்கூடிய இலாபமோ அல்லது நட்டமோ பாதிப்படையாத சந்தர்ப்பத்தில் இருக்க கூடிய வர்த்தக ஒருங்கிணைப்புதவிர கொடுக்கல் வாங்கலில் கொத்தின் அல்லது பொறுப்பின் ஆரம்ப இனங்காணலிலிருந்து எழுந்தால் பிற்போடப்பட்ட வரி கணக்கிடப்படமாட்டாது. அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதி நாளில் சட்டமாக்கப்பட்டுள்ள வரி வீதங்களைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரி தீர்மானிக்கப்படுவதுடன், குறிப்பிட்ட பிற்போடப்பட்ட வரி நிறைவேற்றப்படும் போது அல்லது பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு தீர்க்கப்படும் போது பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் நடைமுறை வரிப் பொறுப்புக்களுக்கு எதிராக நடைமுறை வரிச் சொத்துக்களை குறைநிரப்புவதற்கு சட்டரீதியாக செயற்படுத்தக்கூடிய உரிமை இருக்கும் போதும் அதே வரிவிதிப்பு அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வருமான வரிகள் தொடர்பான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதான பிற்போடப்பட்ட வரிகள் உள்ள போதும் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் குறைநிரப்பப்படுகின்றன.

## 2.15 ஊழியர் நலன்கள்

தாபனம் நிலையான நன்மைகள் மற்றும் நிலையான பங்களிப்பு திட்டங்களைக் கொண்டுள்ளது.

### 2.15.1 நிலையான பங்களிப்புத் திட்டம்

நிலையான பங்களிப்புத் திட்டமானது தொழிலுக்குப் பின்னரான நன்மைகள் திட்டத்தின் கீழ் தனிப்பட்ட நிறுவனமொன்றுக்கு நிலையான பங்களிப்புக்களைத் தாபனம் செலுத்தும் திட்டமாகும். தாபனம் மேலதிகப் பங்களிப்புக்களைச் செலுத்துவதற்கு எவ்வித சட்ட ரீதியான அல்லது ஆக்கபூர்வமான பொறுப்பினையோ கொண்டிருப்பதில்லை. பங்களிப்புக்கள் செலுத்த வேண்டும் போது ஊழியர் நலன் செலவாக இனங்காணப்படும்.

தாபனம் ஊரியரின் மொத்த ஊதியத்திலிருந்து 12%இனை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் *(EPF)* மொத்த ஊதியத்தின் 3%இனை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியதிற்கும் *(ETF)* பங்களிக்கின்றது.

### 2.15.2 நிலையான நலன்கள் திட்டம்

நிலையான நலன்கள் திட்டம் தொடர்பில் தாபனத்தின் கடப்பாடானது, அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் உள்ள நிலையான நன்மைகள் கடப்பாட்டின் நடப்புப் பெறுமதியாகும். நிலையான நன்மைகள் கடப்பாடு வருடாந்தம் நெறிப்படுத்தப்பட்ட அலகுப் பற்று முறைமையைப் பயன்படுத்தி அளவிடப்படுகின்றது.

நிலையான நலன்கள் திட்டத்தின் செலவு காப்பீட்டு கணிப்பீடுகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படும். காப்பீட்டுக் கணிப்பீடானது விலைக்கழிவு வீதங்கள், சொத்துக்கள் மீதான வருமதிகளின் எதிர்பார்க்கப்பட்ட வீதங்கள், எதிர்கால சம்பள உயர்வுகள், முதிரிச்சியடையும் வீதங்கள், எதிர்கால ஓய்வூதிய அதிகரிப்புக்கள் ஆகியவை தொடர்பில் ஊகங்களை உருவாக்குவதில் ஈடுபடுகின்றது. கணிப்பீட்டின் சிக்கல்தன்மை மற்றும் நெடுங்கால தன்மை காரணமாக அவ்வாறான கணிப்பீடுகள் உறுதியற்றதன்மைக்கு உட்படுவதுடன், கடப்பாடுகள் இக்கணிப்பீடுகள் மற்றும் ஊகங்களின் மாற்றங்களுக்கு கடுமையாக உட்படுவதாக உள்ளது. நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் குறிப்பு இல 12இல் கணிப்பீடுகளில் பயன்படுத்தப்படும் முக்கியமான ஊகங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.15.3 குறுங்கால ஊழியர் நன்மைகள்

குறுங்கால ஊழியர் நன்மைக் கடப்பாடுகள் ஊழியர்களால் வழங்கப்பட்ட சேவைகள் தொடர்பாக செலுத்தவதற்கு எதிர்பார்க்கப்படும் தள்ளுபடியற்ற தொகையின் அடிப்படையில் அளவிடப்படும்.

### 2.16 ஏற்பாடுகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள்

தொழிற்படு செலவினங்களுக்கான ஏற்பாடுகள் கடந்த நிகழ்வொன்றின் காரணமாக நடப்பு சட்டரீதியான மற்றும் ஆக்கபூர்வமான கடப்பாட்டினை தாபனம் கொண்டிருக்கும் போதும் தாபனத்தால் வேண்டப்படும் பொருளாதார வளங்களின் வெளிப்பாய்ச்சல் மற்றும் தொகைகள் நம்பகமான முறையில் மதிப்பீடு செய்யப்படும் என்பது சாத்தியமாகும் போதும் இனங்காணப்படும்.

ஏற்பாடுகள் நடப்புக் கடப்பாடுகளுடன் தொடர்புபட்ட இடர்கள் மற்றும் ஐயப்படுகள் உட்பட அறிக்கையிடும் நாளில் காணப்படும் மிகவும் நம்பகமான ஆதாரத்தினை அடிப்படையாகக் கொண்டு நடப்புக் கடப்பாடுகளைத் தீர்ப்பதற்கு அவசியமான மதிப்பிடப்பட்ட செலவினங்களில் அறவிடப்படும் .

எல்லா எதிர்பாரா பொறுப்புக்களும் வளங்களின் வெளிப்பாய்ச்சலின் சாத்தியப்பாடு இல்லாதவிடத்து, நிதிக்கூற்றுக்களின் ஒரு குறிப்பாகத் தெரிவிக்கப்படும்.

## 2.17 வருவாயை இனங்காணல்

வருவாய் தேறிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரிகளில் (VAT) தெரிவிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மீதான கிடைக்கவேண்டிய தொகையைப் பிரதிபலிப்பதுடன், கிடைக்கப் பெற்ற அல்லது கிடைக்க வேணடியவை மீதான நியாயமான பெறுமதியில் அளவிடப்படுகின்றது. வருவாய் தொகையை நம்பகமான முறையில் அளவிட முடிகின்ற போதும் தாபனத்திற்கு எதிர்கால பொருளாதார நன்மைகள் கிடைக்கும் சாத்தியம் உள்ள போதும் தாபனம் வருவாயை இனங்காண்கின்றது.

வருவாயை உருவாக்கக்கூடிய முக்கியமான வகையினங்களை இனங்காண்பதற்கு பின்வரும் வருவாய் இனங்காணல் பிரமாணங்களை தாபனம் கவனத்திற் கொள்கின்றது.

### 2.17.1 பொருட்களின் விற்பனை

பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாய் வாடிக்கையாளரிடமிருந்து வார்நாமத்தினைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், வர்த்தக விலைப்பட்டியலை உயர்த்தும் சந்தர்ப்பத்தில் இனங்காணப்படுகின்றது.

### 2.17.2 வட்டி வருமானம்

வட்டி வருமானம் விளைபயன்மிக்க வரி முறைமையைப் பயன்படுத்தி இனங்காணப்படும்.

### 2.17.3 சொத்துக்கள், பொறித் தொகுதி மற்றும் கருவிகள் என்பவற்றை அகற்றுவதால் ஏற்படும் இலாபம் மற்றும் நட்டங்கள்

அகற்றுகைகளால் ஏற்படும் இலாபங்ககள் மற்றும் நட்டங்கள் என்பன காவுகைத் தொகையுடன் விளைவுகளை ஒப்பிட்டு தீர்மானிக்கப்படுவதுடன், விபரமான வருமானக் கூற்றில் வகைப்படுத்தப்படும்.

## 2.18 செலவினங்கள்

தொழிற்பாடுகளின் இயக்கத்தினால் ஏற்படும் எல்லா செலவினங்களும் அறிக்கையிடும் காலப்பிரிவிற்கான இலாபத்தை அடையும் வருமானதிற்கு கட்டணம் விதிக்கப்பட்டுள்ளது.

## 2.19 அறிக்கையிடும் காலப்பகுதிக்கப் பின்னர் ஏற்படும் நிகழ்வுகள

அறிக்கையிடும் காலப்பதியின் பின்னர் ஏற்படும் அனைத்து முக்கியமான நிகழ்வுகளும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளதுடன், நிதிக் கூற்றுக்களுக்கான உரிய குறிப்புக்களில் பொருத்தமான சரிப்படுத்தல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.20 பொறுப்புக்கள்

அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் உள்ள அனைத்து பொறுப்பக்களும் இனங்காணப்பட்டு, நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டுளளன.

## 2A. முக்கியமான கணக்கீட்டு மதிப்பீடுகளும் கருத்துக்களும்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவினங்கள் ஆகியவை தொடர்பான இனங்காணல் மற்றும் அளவீடுகள் குறித்து பல கருத்துக்கள், மதிப்பீடுகள், ஊகங்கள் ஆகியவற்றை முகாமை கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

2A.1 நிதிக்கூற்றுக்கள் மீத குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்துகையில் அவசியமான முக்கிய தீர்மானங்கள் பின்வருமாறு.

### 2A1.1 பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களை இனங்காணல்

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களை எந்ததளவில் இனங்காணலாம் என்பது பயன்படுத்தக் கூடிய பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களுக்கு எதிராக எதிர்கால வரி விதிக்கக் கூடிய வருமானத்தின் சாத்தியக்கூறின் மத்ப்பீட்டு அடிப்படையில் உள்ளது.

2A.2 சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவினங்கள் ஆகியவை தொடர்பான இனங்காணல் மற்றும் அளவீடுகளில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தும் மதிப்பீடுகள், ஊகங்கள் குறித்து தகவல்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன:

### 2A.2.1 பெறுமானத் தேய்வு கொண்ட சொத்துக்களின் பயன்மிகு ஆயுட் காலம்

அறிக்கையிடும் ஒவ்வொரு காலப்பகுதியிலும் முகாமை அதன் பெறுமானம் தேய்வடையக் கூடிய சொத்துக்களின் பயன்மிகு ஆயுட் காலத்தின் மதிப்பீட்டினை சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார பயன்பாட்டின் அடிப்படையில் மீளாய்வு செய்கின்றது. குறிப்பிட்ட சில கணினி மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்ப கருவிகளை மாற்றுவதன் மூலமாக ஏற்படக் கூடிய தொழில்நுட்பங்களின் வழக்கற்று போதல் நிலைமை காரணமாக இம்மதிப்பீடுகளில் நிச்சயமற்ற தன்மை ஏற்படலாம்.

### 2A.2.2 நிலையான நன்மைகள் திட்டம்

நிலையான நலன்மைகள் திட்ட கடப்பாடுகளின் நடப்புப் பெறுமதி பல ஊகங்களைக் கையாண்டு நெறிப்படுத்தப்பட்ட அலகுப் பற்று முறைமையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் பல காரணிகளில் தங்கியுள்ளது. கழிவு வீதம் உட்பட நிலையான நன்மைகள் திட்டத்திற்கான தேறிய செலவு மற்றும் கடப்பாடு ஆகியவற்றைத் தீர்மானிப்பதில் ஊகங்கள் பயன்படுத்தப்படும். இவ்வூகங்களில் ஏற்படும் ஏதேனும் மாற்றம் நிலையான நன்மைகள் கடப்பாட்டின் காவுகைத் தொகையில் பாதிப்பை ஏற்படுத்தும்.

திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது

## குறிப்பு 03 வருவாய்

| | மொத்த விற்பனைகள ரூபா | VAT ரூபா | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|---|---|
| ரூட்டைல் | 224,502,090 | ----- | 224,502,090 | 215,754,000 |
| இல்மனைற்று | 872,086,715 | ----- | 872,086,715 | 211,022,355 |
| சர்க்கோன் | 128,799,473 | 96,131 | 128,703,342 | 30,936,823 |
| Hi.Ti.இல்மனைற்று | 84,355,494 | ----- | 84,355,494 | 27,778,214 |
| காந்தமல்லா | --------- | ----- | --------- | 190,617,812 |
| சுருள் நுண் மண் | --------- | ----- | --------- | 132,197,810 |
| பதப்படுத்தப்படா சர்க்கோன் | 39,754,876 | ----- | 39,754,876 | 229,965,362 |
| பதப்படுத்தப்படா சர்க்கோன் உயர் தரம் | 67,174,412 | ----- | 67,174,412 | 89,880,676 |
| பதப்படுத்தப்படா சர்க்கோன் குறைந்த தரம் | 172,260 | ----- | 172,260 | 3,817,595 |
| காந்தமல்லா | 14,948 | 1,950 | 12,998 | 41,618,740 |
| வடிகட்டிய பின் மீதமுள்ள செறிவு | 7,498,287 | ------ | 7,498,287 | ----------- |
| | 1,424,358,555 | 98,081 | 1,424,260,474 | 1,173,589,387 |

## குறிப்பு 04 விற்பனைச் செலவுகள

| | 2017 | 2016 |
|---|---|---|
| ரூட்டைல் | 49,076,178 | 56,644,369 |
| இல்மனைற்று | 256,111,509 | 110,925,238 |
| சர்க்கோன் | 24,411,397 | 9,441,973 |
| Hi.Ti.இல்மனைற்று | 50,007,445 | 43,665,024 |
| காந்தமல்லா | ---------- | 72,019,638 |
| சுருள் நுண் மண் | ---------- | 59,246,040 |
| பதப்படுத்தப்படா சர்க்கோன் | 22,448,796 | 153,522,028 |
| பதப்படுத்தப்படா சர்க்கோன் உயர் தரம் | 37,948,021 | 45,299,060 |
| பதப்படுத்தப்படா சர்க்கோன் குறைந்த தரம் | 28,552,970 | 8,488,891 |
| பதப்படுத்தப்படா மொனசைட் | 2,198 | 7,080,324 |
| வடிகட்டிய பின் மீதமுள்ள செறிவு | 3,002,924 | ---------- |
| | 471,561,438 | 566,332,585 |

## குறிப்பு 05 ஏனைய தொழிற்பாட்டு வருமானம்

| | 2017 | 2016 |
|---|---|---|
| தாமதக் கட்டணங்களிலிருந்து வருமானம் | 18,132,480 | 2,058,509 |
| சொத்துக்களின் விற்பனை மீதான இலாபம் | 3,249,932 | 1,025,093 |
| நாணயமாற்றுத் தளம்பல் | 15,719,305 | ------- |
| | 37,101,717 | 3,083,602 |

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|
| **குறிப்பு 06 விநியோகித்தற் செலவுகள்** | | |
| சம்பளங்களும் ஊதியங்களும் | 3,819,712 | 4,016,334 |
| மேலதிக நேரம் | 61,058 | 62,718 |
| வரவு ஊக்குவிப்புத்தொகை | 173,800 | 146,400 |
| உணவுக் கொடுப்பனவு | 204,450 | 222,900 |
| சேமலாப நிதியப் பங்களிப்பு | 526,776 | 505,910 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 334,389 | 122,384 |
| தபால் மற்றும் தொலைபேசி | 73,823 | 74,107 |
| அச்சிடல் மற்றும் காகிதாதிகள் | 223 | ---- |
| விளம்பரப்படுத்தல் மற்றும் விற்பனை ஊக்குவிப்பு-உள்ளூர் | 1,365,425 | 1,065,50 |
| பிரபலப்படுத்தல் மற்றும் கண்காட்சி | 136,408 | ---- |
| பரிமாற்றத் தளம்பல் | -- | 301,615 |
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 131,694 | 115,148 |
| | 6,827,758 | 6,633,016 |

## குறிப்பு 07 நிர்வாகச் செலவினங்கள்

| | | |
|---|---|---|
| பணிப்பளர்களின் கொடுப்பனவுகள் | 205,000 | 58,000 |
| தலைவரின் கொடுப்பனவுகள் | 1,143,823 | 600,000 |
| சம்பளங்களும் ஊதியங்களும் | 267,500 | ------ |
| சம்பளங்களும் ஊதியங்களும் | 1,244,025 | ------ |
| களியாட்ட நிகழ்ச்சி | 320,565 | 300,000 |
| எரிபொருள் மற்றும் மசகெண்ணெய் | 626,336 | 205,409 |
| வாகனப் பராமரிப்புச் செலவினங்கள் | 675,000 | 298,667 |
| வாகன வாடகைக் கட்டணங்கள் | -- | 12,462 |
| வெளிநாட்டுப் பயணம் | 25,116 | |
| தபால் மற்றும் தொலைபேசிக் கட்டணங்கள் | 95,639 | 113,903 |
| நிர்வாக/ பொதுச் செலவினங்கள- (குறிப்பு 7A) | 175,286,181 | 168,632,680 |
| | 179,889,185 | 170,221,121 |

## குறிப்பு 07A நிர்வாக /பொதுச் செலவினங்கள்

| | | |
|---|---|---|
| சம்பளங்களும் ஊதியங்களும் | 58,080,912 | 61,897,346 |
| மேலதிக நேரம் | 6,414,288 | 5,972,932 |
| வரவு ஊக்குவிப்புத்தொகை | 2,796,100 | 2,533,850 |
| பணிக்கொடை | 7,311,699 | 9,337,461 |
| உணவுக் கொடுப்பனவு | 3,449,850 | 3,643,425 |
| பணிக்குழாத்தினர் தேநீர் | 534,243 | 648,364 |
| மொழிக் கொடுப்பனவு | 82,680 | 151,771 |
| சேமலாப நிதியப் பங்களிப்பு | 7,711,002 | 7,850,239 |
| ஊழியர் நலன்புரி | 2,365,633 | 2,369,582 |
| 25 வருட சேவைகால பாராட்டு வைபவம் | 630,000 | ------ |
| சீருடைகள் | 2,463,032 | 2,394,562 |

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| குறிப்பு 07A நிர்வாக /பொதுச் செலவினங்கள் தொடர்ச்சி .................. | | |
| மருத்துவத் திட்டம் | 243,091 | 2,365,798 |
| பயணம் மற்றும் பிழைப்பூதியம் | 458,582 | 447,732 |
| களியாட்ட நிகழ்ச்சி | 12,453 | 38,321 |
| சிற்றுண்டி | 356,343 | 359,828 |
| தொழில்வாண்மைசார் கட்டணங்கள் | 4,366,475 | 817,751 |
| மின்சாரம் | 2,143,877 | 2,500,140 |
| எரிபொருள் மற்றும் மசகெண்ணெய் | 2,198,316 | 2,441368 |
| பொளவனவுகள் | 392,163 | 884,720 |
| பருதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு | 1,435,242 | 2,483,449 |
| நீர் | 318,350 | 484,653 |
| கேழ்வு முற்கொடுப்பனவு | -------- | 142 |
| ஊழியர் பயிற்சி | 1,515,686 | 2,417,525 |
| வாடகை மற்றும் வரிகள் | 9,545,815 | 10,261,647 |
| காப்புறுதி – மோட்டார் வாகனங்கள் | 623,015 | 655,417 |
| காப்புறுதி – பணியாளர் விபத்து | 1,363 | 45,791 |
| காப்புறுதி – வழியிடைப் பணம் | 32,176 | 2,146 |
| காப்புறுதி – நம்பகமான உத்தரவாதம் | 126,449 | 203,828 |
| காப்புறுதி – தீ | 6,748 | 18,157 |
| காப்புறுதி – மருத்துவ | 5,547,988 | 5,103,074 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 61,570 | 65,220 |
| வாகனப் பராமரிப்புச் செலவினங்கள் | 11,827,021 | 7,240,763 |
| வாகன வாடகைக் கட்டணங்கள் | 237,884 | 462,253 |
| மின்பிறப்பாக்கி வாடகை | 20,000 | ----- |
| தபால் மற்றும் தொலைபேசிக் கட்டணங்கள் | 1,629,894 | 1,528,097 |
| அச்சிடல் மற்றும் காகிதாதிகள் | 1,444,313 | 1,145,904 |
| புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் | 7,820 | 83,407 |
| சந்தா | 873,210 | 718,565 |
| நானாவிதச் செலவினங்கள் | 119,345 | 264,064 |
| களஞ்சியங்கள் நானாவிதம் | ----- | 720 |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | 347,000 | 215,005 |
| விளம்பரப்படுத்தல் செலவினங்கள் | 85,050 | ----- |
| தாபன சமூகஞ்சார் பொறுப்புக்கள் | 1,457,673 | 30,552 |
| சட்டச் செலவினங்கள் | 3,602,202 | 529,857 |
| அச்சக அறிவித்தல்கள் | 3,609,450 | 1,332,835 |
| வங்கிக் கட்டணங்கள் | 13,746,236 | 217,341 |
| பெறுமானத்தேய்வு | 1,458,317 | 7,056,196 |
| மென்பொருள் காலத்தேய்வு | 94,516 | 181,033 |
| குத்தகைக்கு எடுத்த காணியின் காலக்கழிவு | 831,406 | 831,406 |
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 1,928,072 | 1,963,148 |
| பணியாளர் இழப்பீடு | ------ | 13,089,720 |
| மிகை ஊதியம் | 1,431,591 | 1,529,679 |
| இலாப ஊக்குவிப்பு | 9,310,039 | 1,815,896 |
| | 175,286,181 | 168,632,680 |

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|

## குறிப்பு 08 ஏனைய தொழிற்பாட்டு வருமானம்

| | | |
|---|---|---|
| ஈர்க்கப்படாத மேந்தலைகள் - குறிப்பு 8.1 | 325,382,698 | 305,270,258 |
| Hi.Ti. இல்மனைற்று இருப்புச் அசம்மையாக்கம் -- NRV | -- | 5,699,101 |
| குறைந்த தர பதப்படுத்தப்படா சர்கொன் -- NRV | 39,449,525 | 4,375,637 |
| பதிவழிப்புக்கள் | -- | (20,304) |
| அன்பளிப்பு | 111,200 | ------- |
| | 364,943,423 | 315,324,692 |

## குறிப்பு 08.1 ஈர்க்கப்படாத பொறித்தொகுதி மேந்தலைகள்

| | | |
|---|---|---|
| கப்பலேற்றுதல் | 4,884,232 | 4,093,507 |
| காந்த பிரிப்பான் பொறித்தொகுதி | 34,743,044 | 54,342,544 |
| ஈர மற்றும் உலர் ஆலை | 10,664,779 | 18,520,318 |
| ஏனைய செலவு மையங்களிலிருந்து மாற்றப்படல் | 275,090,643 | 228,313,889 |
| | 325,382,698 | 305,270,258 |

## குறிப்பு 09 நிதிசார் வருமானம்

| | | |
|---|---|---|
| பணிக்கொடை நிதிய முதலீடுகள் மீதான வட்டி | 300,807 | 284,671 |
| பொது முதலீடுகள் மீதான வட்டி | 85,014,719 | 36,817,791 |
| அலுவலர் கடன் மற்றும் ஏனைய வருமானம் மீதான வட்டி | 8,862,186 | 4,943,264 |
| வீடமைப்புக் கடன் மீதான வட்டி– HDFC | 1,778,710 | 2,216,459 |
| அந்நிய செலாவணிக் கணக்கு மீதான வட்டி | 383,486 | 149,351 |
| S.R.M.C.L. கடன் மீதான வட்டி | -- | 2,500,000 |
| பறிமுதலான விலைமனு வைப்புக்கள் | 59,896 | 5,425,528 |
| | 96,399,804 | 52,337,064 |

## குறிப்பு 10 வருமான வரி செலவினங்கள்

| | | |
|---|---|---|
| வருடத்திற்கான வருமான வரிச் செலவினங்கள் - குறிப்பு 10.1 | 53,500,000 | ----- |
| பிற்போடப்பட்ட வரிவிதிப்பு | 7,440,329 | 16,360,033 |
| | 60,940,329 | 16,360,033 |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| **திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது** | 2017<br>**ரூபா** | 2016<br>**ரூபா** |
|---|---|---|
| குறிப்பு 10.1 நடைமுறை வருமான வரி செலவினங்களுக்கும் கணக்கீட்டு இராப உற்பத்திக்கும் இடையிலான இணக்கம் | | |
| வரிக்கு முன்னரான கணக்கீட்டு இலாபம் | 534,540,191 | 170,498,638 |
| வரிக்கு அனுமதிக்கப்படாத மொத்தச் செலவினங்கள் | 192,201,375 | 182,303,038 |
| வரிக்கு அனுமதிக்கப்பட்ட மொத்தச் செலவினங்கள | (107,626,561) | (132,079,266) |
| ஏனைய மூலங்களுக்கான மொத்த வருமானம் | (96,339,908) | (46,911,535) |
| ஆண்டிற்கான வரி விதிக்கக்கூடிய வியாபாரம் இலாபம்/(நட்டம்) | 522,775,097 | 173,810,875 |
| | | |
| வரிக்கு பொறுப்பான ஏனைய வருமானம் | 95,956,422 | 46,762,184 |
| மொத்த நியதிச்சட்ட வருமானம் | 618,731,519 | 220,573,059 |
| பிரிவு 32இன் கீழ் கழித்தல் | (101,651,381) | (82,806,351) |
| மதிப்பிடக்கூடிய வருமானம் | 517,080,138 | 137,766,708 |
| தகுதிபெறும் கொடுப்பனவுகள் | (72,280,171) | (151,721,711) |
| வரிவிதிக்கக்கூடிய வருமானம் | 444,799,967 | ------ |
| 12%இல் நடப்பு வருமான வரி செலவினங்கள் | 53,375,996 | ------ |
| | 53,500,000 | ------ |
| | 53,500,000 | ------ |

### குறிப்பு 11 பங்கொன்றிற்கான சாதாரண வருவாய்

பங்கொன்றிற்கான சாதாரண வருவாய், ஆண்டிற்குள் சாதாரண பங்குகளின் நிறையளிக்கப்பட்ட சராசரி தொகையினால் சாதாரண பங்குதாரர்களுக்கு பகிரக்கூடிய தேறிய இலாபத்தை வகுத்தலின் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| சாதாரண பங்குதாரர்களுக்கு பகிரக்கூடிய தே. இலாபம் | 473,599,862 | 154,138,606 |
| சாதாரண பங்குகளின் நிறையளிக்கப்பட்ட சராசரி எண்ணிக்கை | 80,000,000 | 80,000,000 |
| **பங்கொன்றிற்கான சாதாரண வருவாய் (ரூபா)** | 5.92 | 1.93 |

## குறிப்பு 12 சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள்

ரூபா.

| விபரம் | 01.01.2017 ஆந் திகதியில் உள்ளவாறு | சேர்மானங்கள் | அகற்றுகைக ள்/சரிப்படுத்து கைகள் | மாற்றல்கள | 2017.12.31 ஆந் திகதியில் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|
| **செலவு** | | | | | |
| இறையிலி நிலம் | 3,029,245 | --- | --- | --- | 3,029,245 |
| வேலைத்தள அபிவிருத்தி | 49,107,211 | --- | --- | --- | 49,107,211 |
| கட்டடங்கள் | 209,076,617 | 4,999,851 | --- | --- | 214,076,468 |
| பொறித்தொகுதியும் இயந்திராதிகளும் | 631,854,080 | 17,192,142 | 3,223,351 | --- | 645,722,871 |
| கருவிகளும் சாதனங்களும் | 45,695,476 | 4,434,697 | 146,627 | (189,222) | 49,794,323 |
| தளபாடங்கள்,பொருத்திகள், கருவிகள் | 28,143,906 | 2,188,427 | 22,596 | 189,222 | 30,498,960 |
| மோட்டார் வாகனங்கள் | 176,951,670 | 91,009,800 | 1,205,591 | --- | 266,755,879 |
| நீர் வழங்கல் திட்டம் | 14,694,456 | --- | --- | --- | 14,694,456 |
| மிதவைப் படகு | 10,931,234 | --- | --- | --- | 10,931,234 |
| கணினி வன்பொருள் | 16,780,897 | 3,643,022 | 1,134,376 | --- | 19,289,543 |
| | 1,186,264,792 | 123,467,939 | 5,732,541 | --- | 1,303,900,190 |
| **பெறுமானத் தேய்வு** | | | | | |
| இறையிலி நிலம் | --- | --- | --- | --- | --- |
| வேலைத்தள அபிவிருத்தி | 11,675,376 | 2,437,545 | --- | --- | 14,112,923 |
| கட்டடங்கள் | 66,115,507 | 8,147,007 | --- | --- | 74,262,514 |
| பொறித்தொகுதிம் இயந்திராதிகள் | 353,167,422 | 43,845,156 | 3,323,347 | --- | 393,689,231 |
| கருவிகளும் சாதனங்களும் | 30,877,171 | 3,050,660 | 146,607 | --- | 33,596,042 |
| தளபாடங்கள்,பொருத்திகள், கருவிகள் | 15,436,730 | 2,320,719 | 22,590 | --- | 17,920,041 |
| மோட்டார் வாகனங்கள் | 154,793,995 | 12,408,909 | 1,205,589 | --- | 165,997,315 |
| நீர் வழங்கல் திட்டம் | 14,634,309 | 13,037 | --- | --- | 14,647,345 |
| மிதவைப் படகு | 10,235,795 | 115,105 | --- | --- | 10,350,899 |
| கணினி வன்பொருள் | 15,569,859 | 1,183,308 | 1,134,353 | --- | 15,618,814 |
| | 672,506,164 | 73,521,446 | 5,832,486 | | 740,195,124 |
| தேறிய காவுகைப் பெறுமதி | 513,758,628 | --- | --- | --- | 563,705,066 |
| முடிவுபெறாத மூலதன வேலை | 245,043,713 | 13,233,659 | 593,365 | --- | 257,684,007 |
| | 758,802,341 | 13,233,659 | | --- | 821,389,073 |

## குறிப்பு 13 குத்தகைச் சொத்துக்கள்

ரூபா

| விபரம் | 2017.01.01ஆந் திகதியில் உள்ளவாறு | சேர்மானங்கள் | (அகற்றுகைகள்)/ சரிப்படுத்துகைகள் | 2017.12. 31ஆந் திகதியில் உள்ளவாறு |
|---|---|---|---|---|
| **செலவு** | | | | |
| குத்தகைக் காணி | 24,222,334 | ----- | | 24,222,334 |
| **கடன் தீர்ப்பனவு** | | | | |
| குத்தகைக் காணி | 2,577,288 | 831,407 | | 3,408,695 |
| **தேறிய காவுகைப் பெறுமதி** | 21,645,046 | 831,407 | | 20,813,639 |

## குறிப்பு 14 அருவச்சொத்துக்கள்

ரூபா

| விபரம் | 2017.01.01ஆந் திகதியில் உள்ளவாறு | சேர்மானங்கள் | (அகற்றுகைகள்) /சரிப்படுத்துகைகள் | 2017.12. 31ஆந் திகதியில் உள்ளவாறு |
|---|---|---|---|---|
| **செலவு** | | | | |
| கணினி மென்பொருள | 3,836,584 | 259,249 | | 4,095,833 |
| **கடன் தீர்ப்பனவு** | | | | |
| கணினி மென்பொருள் | 3,479,530 | 147,825 | | 3,627,355 |
| **தேறிய காவுகைப் பெறுமதி** | 357,054 | 111,424 | | 468,478 |

**திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது**

## குறிப்பு 15 முற்பணம்

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| வரை. அரசாங்க வளங்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபனம் | -- | 500,000,000 |
| அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் | 25,000,000 | 25,000,000 |
| ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை | 15,000,000 | 15,000,000 |
| தேசிய கடுதாசி கம்பனி லிமிடட் | 5,000,000 | 5,000,000 |
| கிடைக்கவேண்டிய வட்டி | -------- | 12,421,448 |
| | 45,000,000 | 557,421,448 |

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|
| **குறிப்பு 16 பொருட்பதிவேடுகள்** | | |
| நானாவிதப் பதார்த்தங்கள் | 1,886,173 | 1,094,505 |
| நுகர்வுப் பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் | 168,746,272 | 185,158,284 |
| மூலப் பொருட்கள் மற்றும் இடைநிலை உற்பத்திகள் | 139,019,436 | 64,489,026 |
| முடிவுப் பொருட்கள் மற்றும் அரைநிலை பதப்படுத்தப்பட்ட பொருட்கள் | | |
| – இல்மனைற்று | 73,365,987 | 51,679,615 |
| – ரூடைல் | 18,441,176 | 22,982,438 |
| – சர்கோன் | 8,114,075 | 9,874,631 |
| – மொனசைட் | 4,473,756 | 4,234,761 |
| – Hi.Ti. இல்மனைற்று | 26,339,183 | 23,777,868 |
| – சர்கோன் பதப்படுத்தப்படாதது | 52,661,624 | 68,436,878 |
| – சுருள் நுண் மண் | 8,880,781 | 6,181,258 |
| – உயர் தர சர்கோன் பதப்படுத்தப்படாதது | 99,959,893 | 63,154,371 |
| – இரும்புக் கனிமம் | 1,928,736 | 1,507,781 |
| – குறைந்த தர சர்கோன் பதப்படுத்தப்படாதது | 53,440,521 | 11,151,071 |
| – வடிகட்டிய பின் மீதமுள்ள செறிவு | 4,889,365 | ----- |
| – புதிய ஈர மேசை நடுவண் கழிவுகள | 1,020,676 | ----- |
| – பகுதி A கழிவுகள் | 607,463,315 | 434,867,518 |
| | 1,270,630,969 | 948,590,005 |
| **குறிப்பு 17 குறுங்கால நிதிச் சொத்துக்கள்** | | |
| ஹற்றன் நஷனல் வங்கி | ----- | 16,200,354 |
| கடன்பட்டோர் வட்டி | 65,215,069 | 2,780,872 |
| | 65,215,069 | 18,981,226 |
| **குறிப்பு 18 நிலையான வைப்புக்கள்** | | |
| ஹற்றன் நஷனல் வங்கி | ------ | 215,313,874 |
| இலங்கை வங்கி | ------ | 150,000,000 |
| செய்லான் வங்கி | 900,000,000 | ---------- |
| | 900,000,000 | 365,313,874 |
| **குறிப்பு 19 முற்பணங்களும் வைப்புக்களும்** | | |
| முற்பணங்களும் வைப்புக்களும் | 49,191,331 | 46,955,953 |
| | 49,191,331 | 46,955,953 |
| **குறிப்பு 20 முன்செலுத்திய செலவினங்கள்** | | |
| முன்செலுத்திய செலவினங்கள் | 7,076,726 | 32,618,903 |
| | 7,076,726 | 32,618,903 |

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது | | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|---|
| **குறிப்பு 21 நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| கிடைக்க வேண்டிய VAT | | 118,998,300 | 116,555,768 |
| நானாவித கடன்பட்டோர் | | 18,408 | 1,000 |
| வீடமைப்புக் கடன் - HDFC வங்கி | | 57,013,562 | 62,271,704 |
| ஏனைய கடன்பட்டோர் | | 7,227,958 | 5,676,489 |
| அலுவலர்க்கான கடன் மற்றும் முற்பணம் | | 126,092,352 | 118,658,709 |
| | | 309,350,580 | 303,163,670 |
| கழிக்குக: பெறுமானத் தேய்வு | 21.1 | (224,981) | (224,981) |
| | | 309,125,599 | 302,938,689 |

## குறிப்பு 21.1 பெறுமானத் தேய்வு

வருமதிகளுக்கான பெறுமானத் தேய்வின் அசைவுகள் பின்வருமாறு.

| | 2017 | 2016 |
|---|---|---|
| ஜனவரி 1ஆந் திகதியில் உள்ளவாறு | 224,981 | 224,981 |
| வருடத்தில் மீட்க வேண்டியவை | -------- | -------- |
| **வருடத்தில் மீட்கப்பட்டவை** | 224,981 | 224,981 |

## குறிப்பு 22 வருமான வரி கிடைப்பனவுகள்

| | 2017 | 2016 |
|---|---|---|
| ஜனவரி 1ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை | | (6,096,184) |
| ஆண்டிற்கான ஏற்பாடு | தயவு செய்து குறிப்பு இல.29ஐ உசாவுக. | --------- |
| ஆண்டிற்குள் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | | 34,603,900 |
| குறைந்த/ கூடிய ஏற்பாடுகள் மீதான சரிப்படுத்தல்கள் | | (7,588,740) |
| திசெம்பர் 31ஆந் திகதியில் நிலுவை | | 20,918,976 |

## குறிப்பு 23 காசும் காசுக்கு சமமானவைகளும்

| | | 2017 | 2016 |
|---|---|---|---|
| இலங்கை வங்கி – வெளிநாட்டு நாணய | – ந.க. 073449850 | 35,143,622 | 20,464,869 |
| இலங்கை வங்கி – கூட்டுக் கிளை | – ந.க.0000000931 | ------ | 3,753,866 |
| இலங்கை வங்கி – புல்மோட்டை | - ந.க. 00002367534 | 13,333 | 60,752 |
| ஹற்றன் நஷனல் வங்கி, கருவாக்காடு கிளை | - ந.க.076010004078 | 19,082 | 771,135 |
| மக்கள் வங்கி, புல்மோட்டை | -ந.க. 352-1001-5-0000244 | 18,698 | 127,607 |
| கையிலுள்ள பணம் - புல்மோட்டை | | 51,995 | 154,852 |
| சில்லறைப் பணம் - தலைமை அலுவலகம் | | 50,000 | 20,000 |
| விசேட முன்பணம் - தலைமை அலுவலகம் | | 50,000 | ------ |
| | | 35,346,730 | 25,353,081 |

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|

## குறிப்பு 24 குறிப்பிடப்பட்ட மூலதனம்

| | | |
|---|---|---|
| வழங்கப்பட்ட மற்றும் முழுமையாகச் செலுத்தப்பட்ட 80,000,000 சாதாரண பங்குகள் | 800,000,000 | 800,000,000 |

## குறிப்பு 25 ஏனைய ஒதுக்குகள்

| | | |
|---|---|---|
| பொறித்தொகுதி மற்றும் இயந்திராதிகளை பதிலீடு | 706,346,958 | 706,346,958 |
| செய்தல்/தரமுயர்த்துவற்கான ஆழ் நிதிய முதலீடு | 171,149,673 | 171,149,673 |
| தலைமை அலுவலகக் கட்டட ஆழ் நிதிய முதலீடு | 10,246,238 | 10,246,238 |
| ஊழியர் நஷ்டஈட்டு ஆழ் நிதிய முதலீடு | 18,801,474 | 18,801,474 |
| | 906,544,343 | 906,544,343 |

## குறிப்பு 26 வைத்திருக்கப்படும் வருவாய் / (நட்டம்)

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலுவை | 837,317,294 | 631,093,031 |
| திறைசேரிக்கான பங்கிலாபம் | (161,000,000) | (53,948,000) |
| மிதவைப்படகு காப்புறுதி ஆழ் நிதிய சரிப்படுத்தல்கள் | -- | 111,000,000 |
| பங்குவீத உரிமை சரிப்படுத்தல்கள | (17,559,398) | ----- |
| W.H.T சரிப்படுத்தலகள் | -- | 163,066 |
| Y/A 2015/2016 வருமான வரி ஏற்பாட்டின் கீழ் | -- | (7,988,412) |
| ஓய்வூதிய நன்மைகள் மீதான காப்பீட்டு (இலாபம்)/நட்டம் | (12,598,135) | 2,859,004 |
| அரசாங்க வளங்கள் முகாமைத்துவ சரிப்படுத்தல்கள் | (512,421,448) | ----- |
| Y/A 2016/2017 வருமான வரி ஏற்பாட்டின் கீழ் | (5,308,330) | ---- |
| ஆண்டிற்கான இலாபம் அல்லது/ (நட்டம்) | 473,599,862 | 154,138,605 |
| | 602,029,845 | 837,317,294 |

## குறிப்பு 27 ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடு மீதான முதலீடு

| | | |
|---|---|---|
| ஜனவரி 1ஆந் திகதியில் உள்ளவாறு மீதி | 62,787,484 | 67,657,864 |
| விபரமான வருமானத்தில் இனங்காணப்பட்ட செலவினங்கள் (குறிப்பு 26-1) | 10,374,656 | 11,708,997 |
| ஏனைய விபரமான வருமானத்தில் இனங்காணப்பட்ட காப்பீட்டு (இலாபம்)/நட்டம் | 12,598,135 | (2,859,003) |
| வருடத்தில் செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் | (13,114,171) | (13,720,374) |
| | 72,646,104 | 62,787,484 |
| கழிக்க: திட்டமிடப்பட்ட சொத்துக்களின் நியாயமான பெறுமதி | (4,633,466) | (4,362,740) |
| திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு மீதி | 68,012,638 | 58,424,744 |

### குறிப்பு 27.1 இனங்காணப்பட்ட செலவினங்கள்

| | | |
|---|---|---|
| தற்போதைய சேவைச் செலவினம் | 3,869,872 | 3,089,385 |
| ஆண்டிற்கான வட்டிக் கட்டணம் | 6,504,784 | 8,619,612 |
| | 10,374,656 | 11,708,997 |

| **திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது** | 2017<br>**ரூபா** | 2016<br>**ரூபா** |
|---|---|---|

## குறிப்பு 27.2 காப்பீட்டு அனுமானம்

குறிக்கப்பட்ட நலன்கள் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியை கணிப்பிடுவதைத் தீர்மானிப்பதில் பயன்படுத்தப்பட்ட முக்கியமான காப்பீட்டு அனுமானத்தில் உள்ளடங்குவன

| | 2017 | 2016 |
|---|---|---|
| விலைக்கழிவு வீதம் | 10.36% | 12.74 % |
| சம்பள உயர்வு வீதம் | ------ | ------ |
| இளைப்பாறும் வயது | 60 ஆண்டுகள் | 60 ஆண்டுகள் |
| பணிக்குழாம் மொத்த பரிமாற்ற வீதம் | | |
| **55 வரை** | 1.18% | 1.18 % |
| **அதன் பிறகு** | 0.00% | 0.00 % |

பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 30(1) இன் அடிப்படையில் வருடாந்த சம்பள உயர்வு வீதங்கள் உள்ளன.

## குறிப்பு 28 பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

| | 2017 | 2016 |
|---|---|---|
| ஜனவரி 01ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை | 48,460,989 | 32,100,956 |
| வருமானக் கூற்றுக்கான கட்டணம் | 7,440,329 | 16,360,033 |
| ஆண்டிற்குள் இனங்காணப்பட்ட சொத்துக்கள் | -------- | ---------- |
| திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை | 55,901,318 | 48,460,989 |

## குறிப்பு 28.1 பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு

| | அடிப்படையில் வரி 31.12.2017 | காவுகைத் தொகை 31.12.2017 | Net 31.12.2017 | Net 31.12.2016 |
|---|---|---|---|---|
| PPE மீதான முதலீட்டு முற்கொடுப்பனவில் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு | 584,987,182 | 46,931,144 | 538,056,038 | 465,126,992 |
| ஓய்வூதிய நலன்கள் பொறுப்பு மீதான பிற்போடப்பட்ட வரிச சொத்துக்கள் | (72,646,104) | -------- | (72,646,104) | (62,787,485) |
| தேறிய தற்காலிக வித்தியாசம் | | | 465,409,934 | 402,339,507 |
| PPE மீதான மூலதன முற்கொடுப்பனவில் பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு | 538,056,038 | .93 * 12% | 64,521,528 | 55,658,956 |
| | | 0.07 * 28% | 105,459 | 364,660 |
| | | | 64,626,987 | 56,023,616 |
| ஓய்வூதிய நலன்கள் பொறுப்பு மீதான பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள | 72,646,104 | 99.93 *12% | 8,711,430 | 7,513,402 |
| | | 0.07 * 28% | 14,239 | 49,225 |
| | | | 8,725,669 | 7,562,627 |
| **திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு தேறிய பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு** | | | 55,901,318 | 48,460,989 |

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானது | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|

## குறிப்பு 29 வருமான வரி செலுத்த வேண்டியவை

| | | |
|---|---|---|
| ஜனவரி 1ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை | (20,918,976) | |
| ஆண்டிற்கான ஏற்பாடு | 53,500,000 | இல. 22ஐ தயவு செய்து உசாவவும |
| ஆண்டிற்குள் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் | (13,531,553) | |
| சரிப்படுத்தல்கள் | 5,308,330 | |
| | 24,357,801 | |

## குறிப்பு 30 வர்த்தகம் மற்றும் ஏனைய கடன் கொடுத்தோர்

| | | |
|---|---|---|
| கொள்வனவாளரிடமிருந்து முற்பணம் | 800,057 | 140,885,205 |
| நானாவித கடன் கொடுத்தோர் | 19,745,063 | 10,862,244 |
| விலைமனு வைப்புக்கள் | 47,253,782 | 3,671,322 |
| தடுத்துவைக்கப்பட்ட பணம் | 14,620,416 | 21,051,156 |
| அலுவலர் சம்பளங்கள் | 9,824,054 | 14,979,165 |
| செலுத்த வேண்டிய பணிக்கொடை | 108,728 | 108,728 |
| செலுத்த வேண்டிய பங்கிலாபம் | 373,448,000 | 212,448,000 |
| வியாபார கடன் கொடுத்தோர் | 931,700 | 931,700 |
| | 466,731,800 | 404,937,520 |

## குறிப்பு 31 ஏற்பாடுகள் மற்றும் சேரும் செலவினங்கள்

| | | |
|---|---|---|
| ஏற்பாடுகள் மற்றும் சேரும் செலவினங்கள் | 64,431,082 | 44,211,706 |

## குறிப்பு 32 மேலதிகப்பற்று

| | | |
|---|---|---|
| இலங்கை வங்கி | 89,515,661 | |
| செய்லான் வங்கி | 446,733,127 | ---- |
| | 536,248,788 | ---- |

## குறிப்பு 33 சம்பந்தபட்ட தரப்பினரின் வெளிப்படுத்தல்கள்

### குறிப்பு 33.1 முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல் வாங்கல்கள்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் LKAS 24இற்கு “சம்பந்தப்பட்ட தரப்பினரின் வெளிப்படுத்தல்களின்” படி, முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் தாபனத்தின் செயற்பாடுகளைத் திட்டமிடல், வழிகாட்டல் கட்டுப்படுத்தல் ஆகியவை தொடர்பாகப் பொறுப்புக்களைக் கொண்டுள்ளனர். அதன்படி, பணிப்பாளர் சபை (நிறைவேற்று அதிகாரங் கொண்ட மற்றும் நிறைவேற்று அதிகாரங் கொண்டிராத பணிப்பாளர்கள் உட்பட) முக்கிய முகாமைத்துவ ஆளணியினராக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

முக்கிய முகாமைத்துவ ஆளணியினருடனான கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு:

To be one of the leading foreign exchange earners in the country.

| | 31.12.2017<br>ரூபா | 31.12.2016<br>ரூபா |
|---|---|---|
| முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு மேற்கொள்ளப்பட்ட செலவுகள் | 1,348,823 | 658,000 |
| முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணம் | ஒன்றும் இல்லை | ஒன்றும் இல்லை. |

### குறிப்பு 33.2 சம்பந்தப்பட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்

முக்கியமான சம்பந்தப்பட்ட தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் குறித்து விபரங்கள் பின்வருமாறு:

| **தாபனத்தின் பெயர்** | **தொடர்பு** | **கொடுக்கல் வாங்கல்களின் தன்மை** | **பெறுமதி 2017 ரூபா** | **பெறுமதி 2016 ரூபா** |
|---|---|---|---|---|
| நில அமைப்பு மற்றும் அகழ்வாராய்ச்சிப் பணியகம் | சம்பந்தப்பட்ட நிறுவனம் | செலுத்தப்பட்ட ஆதாய உரிமை | 101,651,381 | 82,806,351 |
| ஜனத்தா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை | | வழங்கப்பட்ட கடன் | 15,000,000 | 15,000,000 |
| தேசிய கடுதாசி கூட்டுத்தாபனம் | | வழங்கப்பட்ட கடன் | 5,000,000 | 5,000,000 |
| அரச முகாமைத்துவம் வளங்கள் கூட்டுத்தாபனம் | சம்பந்தப்பட்ட நிறுவனம் | வழங்கப்பட்ட கடன் | ---- | 500,000,000 |
| அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் | | வழங்கப்பட்ட கடன் | 25,000,000 | 25,000,000 |
| மத்திய வங்கி | | ஈட்டப்பட்ட வட்டி | 85,000,000 | 33,136,012 |
| மத்திய வங்கி | | வைப்புக்களை மீளப்பெறல் | 1,860,000,000 | 1,801,370,609 |

## குறிப்பு 34 அறிக்கையிடும் கால முடிவின் பின்னர் ஏற்படக்கூடிய நிகழ்வுகள்

இந் நிதிக் கூற்றுக்களில் பொருத்தமான சரிப்படுத்தல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்ய வேண்டிய எவ்வித நிகழ்வும் நிதி நிலைமைக் கூற்றுத் திகதிக்கு பின்னர் ஏற்படவில்லை.

## குறிப்பு 35 கடப்பாடுகள்

கனிய மணல் இருப்பினை ஆவணமாகப் பிணை வைத்து இலங்கை வங்கியிடமிருந்து 100 மில்லியன் ரூபா மேலதிகப்பற்று பெறப்பட்டது. நிலையான வைப்புக்களை ஆவணமாகப் பிணை வைத்து செய்லான் வங்கியிடமிருந்து 440 மில்லியன் ரூபா மேலதிகப்பற்று பெறப்பட்டது. மேலும், இரு வசதிகளும் இவ்வாண்டினுள் பயன்படுத்தப்பட்டன.

## குறிப்பு 36 எதிர்பாரா நிகழ்வுகள்

அறிக்கையிடும் கால முடிவைத் தொடர்ந்து இங்கு நிதிக் கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்கோ அல்லது சரிப்படுத்தவோ அவசியமான தற்செயல் பொறுப்புக்கள் எதுவும் இல்லை.